Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்
சகல நிகழ்வுகளுக்கும் ராசியான
ஸ்தாபனம்



மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P – 0777 286247.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 12 (23.03.2005) புதன்கிழமை இதழ்:175

# நடிகர் ஜெமினி கணேசன் 84 வயதில் காலமானார்!




(சென்னை)

தமிழ்த் திரையுலகில் 'காதல் மன்னன்' என்று அழைக்கப்பட்ட பழம்பெரும் நடிகர் ஜெமினி கணேசன் நேற்று அதிகாலை 2 மணியளவில் மூச்சுத் திணறலால் மரணமானார். இறக்கும்போது அவருக்கு வயது 84 ஆகும்.

கடந்த ஒரு வருடமாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்ட ஜெமினி கணேசன் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவரது உடல் நிலை மோசமான போதும், தீவிர சிகிச்சைக்குப் பின்னர் உடல் நிலை தேறியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



"சாயம் வெளுக்குதெண்டு அம்மாவுக்கு கோபம் வந்திட்டுது போல"

# 'சண்டே லீடரின்' செய்திக்கு அன்ரன் பாலசிங்கம் மறுப்பு!

(கொழும்பு)


லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கைத் தமிழரான இராஜசிங்கம் - ஜெயதேவன் என்பவர், இலங்கையின் வட பகுதிக்குச் சென்றவேளை, விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு பிரிட்டன் புலனாய்வுத் துறை தமக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகவும், கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் வெளியிட்ட செய்தியை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மறுத்துள்ளார்.



இது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலவார இத

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுக்கள் பற்றிய தகவல்களை கசியவிட்ட படையதிகாரிகள் மீது ஜனாதிபதி சந்திரிகா கடும் சீற்றம்!



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களின் நடமாட்டங்கள் குறித்தும் அவர்களின் முகாம்கள் தொடர்பாகவும், சுதந்திரமாக செய்திகளைச் சேகரிப்பதற்கு இடமளித்து - இந்த விவகாரம் அம்பலமாக காரணமாக இருந்ததாக இராணுவ அதிகாரிகள் மீது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆத்திரம் கொண்டிருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை ஆதாரம்காட்டி வெளிவந்த செய்தி ஒன்று தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான முறையில் ஆயுதக்குழுக்கள் நடமாடுவது தொடர்பாகவும், அவர்களது முகாம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த விபரத்தை செய்தி சேகரிக்க ஊடகமொன்றுக்கு அனுமதித்தமை தொடர்பாகவும் இராணுவ அதிகாரிகள் மீது ஜனாதிபதி மிகவும் கோபமடைந்துள்ளார்.

படையினருடன் இணைந்து எந்த ஆயுதக் குழுக்களும் செயற்படவில்லையென ஜனாதிபதி செயலகம் கடந்த மாதம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. கடந்தவாரமும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால இதனையே வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடு குறித்து பகிரங்கமாக தெரியவந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மூன்றுநாள் விஜயமாக அடுத்த மாதம் 6 ஆம் திகதி புதுடெல்கி செல்லவுள்ளதாக ஐ.தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் தனது புதுடெல்கி பயணத்தின் நிறைவு நாளான 8 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். எனினும், இவர் தனது பயண நாட்களில் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் மற்றும் வெளியுறவு அமைச்சு செய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஹெயிட்டியிலிருந்து படைகளை உடன் திருப்பி அழைக்கவேண்டும்!

## அரசாங்கத்திடம் ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

ஹெயிட்டியில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் இலங்கைப் படையினரை உடனடியாகத் திருப்பி அழைக்கவேண்டும் என்று ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

ஹெயிட்டியில் அமைதி காப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவ கோப்ரல் அங்கு நடந்த சண்டையொன்றில் உயிரிழந்த சம்பவத்தையடுத்தே - ஜே.வி.பி. இந்தக் கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுத்துள்ளது.

இலங்கை மக்களின் பணத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு முயற்சியிலிருந்து அரசாங்கம் விலகி விடவேண்டும்!

## தேசப்பற்று இயக்கம் கோருகிறது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்கும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பிலிருந்து அரசாங்கம் உடனடியாக விலகவேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமானால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை முன்நகர்த்த சுவிஸ் உதவி வழங்கத் தயார்!

## வெளிவிவகார திணைக்களத் தூதுவர் தெரிவிப்பு



(ஜெனீவா)

சகஜ நிலையை ஏற்படுத்தி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த போர் நிறுத்த உடன்படிக்கையைப் பேணுவது அவசியமானதென சுவிற்சர்லாந்தின் அரசியல் விவகார பிரிவின் தலைவரும் மனித பாதுகாப்பு, சுவிஸ் வெளிவிவகார சமஷ்டி திணைக்கள தூதுவருமான தோமஸ் கிறீமின்கர் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில் புலிகளின் நெகிழ்வுத்தன்மை குறித்து தாம் திருப்தியடைவதாகவும் இரு தரப்பினருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவும், தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை முன்னகர்த்துவதற்கான உதவிகளை வழங்கவும் தமது அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இவர்களுடனான சந்திப்பில் அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லொறியை ஓட்டிக்கொண்டு கையடக்க தொலைபேசியில் உரையாடிய சாரதிக்கு ஆயிரம் ரூபா அபராதம்

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு லொறியை ஓட் டிச் சென்ற சாரதி ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதி யால் கையடக்கத் தொலைபேசி யில் உரையாடிக்கொண்டு லொறி யினை ஓட்டிச் சென்ற வேளை குறித்த சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சாரதிக்கு எதிராக யாழ். நீதிமன் றத்தில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது பிரஸ் தாப லொறிச் சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, வாக னங்களை ஓட்டிச்செல்லும் வேளை களில் தொலைபேசியில் உரை யாடுவதை கடுமையாக எச்சரித்த நீதிவான் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## யாழ். மாநகர சபை நடத்திய சுனாமி பேரனர்த்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர நூலக சபை நடத்திய சுனாமி அனர்த்த கருத்தரங்கும் சுனாமி அறிவியல் சார் விபரண நூல் அறிமுகமும் நேற்று மாலை 3.00 மணிக்கு யாழ் பொது நூலக கருத்தரங்கு மண்டபத்தில் பேராசிரியர் கோபா லப் பிள்ளை தலைமையில் சிறப் பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றி சுனாமியால் உயிரிழந்த வர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட் டது.



யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவு ரையாளர் எஸ்.ரி.பி இரா ஜேஸ்வரன் சுனாமி அனர்த்தம் பற்றியும், யாழ். பல் கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் சுனாமி அரசியல் பற்றியும், யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைதலைவர் பேராசிரியர் பசுபதிசிவ நாதன் சுனாமி நிவாரணம் பற்றியும், கிழக்கு பல்க லைக்கழக நுண்கலைத் துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ்.மௌன குரு சுனாமியும் தான் கண்ட நேரடி அனுபவம் பற்றியும், கருத்துரை வழங்கினர்.

மாநகர சபை ஆணையாளர் க.குணராசா எழுதிய சுனாமி கடற்கோள் நூலை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வு செய்தார். நன்றியுரையை யாழ். மாநகர ஆணையாளர் க.குணராசா நிகழ்த்தினார்.


### விற்பனைக்கு

எமது சங்கத்தில் தறிக்கப்பட்ட வேப்ப மரக்குற்றிகள், பூவரசமரம், மாமரம், மஞ் சள் உணா போன்ற மரக்குற்றிகளும் அதன் கொப்பு விறகுகளும் விற்பனைக் குள்ளன. பெற விரும்புபவர்கள் - பொது முகாமையாளர், வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி என்ற முகவரியில் வேலை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ரவிகிருஷ்ணா, நதீஷா, ரம்பா நடித்த
**சுக்ரன்**
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

**மனோகரா** திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
**மாயாவி**
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

**நிறைஞ்சனாஸ்**
கமல் (இருவேடம்)
மனீஷா கொய்ராலா நடித்த
**ஆளவந்தான்**
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
குளிரூட்டப்பட்டது
**THE PASSION OF THE CHRIST** (இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3857)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
**லண்டன்**
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (சி-3859)


## சமாந்தரமாக சைக்கிளில் சென்ற நான்கு பேருக்கு அபராதம்

நேற்று முன்தினம் யாழ். நகர வேம்படி வீதியூடாகவும் கஸ் தூரியார் வீதியூடாகவும் துவிச்சக்கர வண்டி யில் சென்ற நான்கு நபர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ததைய டுத்து மேற்படி வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் தலா ரூ. 500 தண்டம் விதித்தார்.

## வாசகர் நோக்கு

### ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் இப்படியும் ஒருமுறை சிந்தியுங்கள்

மாணவர் சமூகமானது உயர் கல்வி பெறும் சந்தர்ப்பம் பெற்றபோ திலும் ஆங்கில அறிவு கட்டாயம் தேவையென்பதை பொருட்படுத் துவதில்லை. இது மாணவர்களது தவறு என்பதிலும் பார்க்க கொள்கை வகுப்பவர்களின் தவறு என்பதே உண்மை நிலையாகும். க.பொ.த (உ/த) மாணவர்கள் தாம் பல் கலைக்கழகம் புகவேண்டும் என்ற ஒரே நோக்கில் தாம் படிக்கவேண் டிய பாடங்களிலேயே அதிக நாட் டம் கொண்டவர்கள்.

பல்கலைக்கழகங்களில் இன்று மருத்துவம், பொறியியல் போன்ற பிரிவுகளில் கல்விபயிலும் மாண வர்கள் க.பொ.த (சா/த) பரீட்சை யில் ஆங்கிலப் பாடத்தில் சித்திய டைந்திருக்க வேண்டுமென்ற எந்த நிபந்தனையும் விதிக்க வில்லை.

ஆனால், இவர்கள் பல்கலைக் கழகம் சென்றதும் தமது கல்வியு டன் ஆங்கிலத்தையும் பயின்று பட்டம்பெற்று இலங்கையில் மட்டு மல்ல மேலைத்தேய நாடுகளிலும் தமது சேவையினைத் திறம்படச் செய்வதை எவரும் மறுக்க முடி யாது.

க.பொ.த (சா/த) ஆங்கிலப் பாடத் தில் சாதாரண அல்லது திறமைச் சித்தி பெற்றவர்கள் என்ற அடிப்ப டையிலேயே நியமனம் வழங்கப் படும் என்று வர்த்தமானியில் தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டு அதனடிப்படையில் நேர்முகப்பரீட் சைக்கும் அழைத்து சரிபார்த்து சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டபின்னர் புதியபுதிய நிபந் தனைகளை விதிப்பது எந்த அடிப் படையில் நியாயமாகும்? போட் டிப்பரீட்சையில் 160க்கும் மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் இருக் கும்போது அவர்களைப் புதிய நிபந் தனையைப் போட்டுத் தவிர்த்து விட்டு வெட்டுப் புள்ளியினை எட்டி யும் பார்க்கமுடியாதவர்களுக்கு நியமனம் வழங்குவதென்ற முடிவு எடுப்பது ஒரு அநீதியென்றே கருத வேண்டியுள்ளது.

மேலும், அனேகமான பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் திற மைச்சித்தி (சி) எடுத்திருந்தும் விசேடசித்தி (டி) எடுக்காத ஒரே காரணத்தால் சேவை நிரந்தரமாக்க வில்லையென்று ஒரு ஆசிரியர் 18.03.2005ஆம் திகதிய பத்திரிகை யில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவர் நிரந்தரமாக் கப்படாவிட்டாலும் கற்பித்துக்கொண் டேயிருக்கிறார். எனவே, ஆங்கி லம் கற்பிப்பதற்கு 'டீ' தான் தேவை என்பதனை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் இளம் ஆசிரி யர்கள் மிகக்குறுகிய காலத்தில் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று தமது ஆங்கில அறிவினை மென் மேலும் அதிகரிக்கச் செய்யும் வாய்ப் பும் சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு என்பதை கல்விச் சமூகம் உணர்ந்து கொள்ளுமா?

*பாதிக்கப்பட்ட மாணவன்*
*கொக்குவில்.*


### முக்கிய அறிவித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் கீழ்க் காணப்படும் விபரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களோ அல்லது பொறுப்புவாய்ந்தவர்களோ கீழ்க்காணப்படும் விபரம் தெரிந்திருப்பின் பிள்ளைகளின் உயரிய நலன் கருதி கீழ்க் காணப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ உடன் அறியத்தரவும்.

- பெற்றோரை இழந்திருக்கலாம்.
- நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
- காணாமல் போயிருக்கலாம்.
- உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்திருக்கலாம்.
- இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்.
- வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம்.
- கல்வி புறக்கணிக்கப்பட்டிருக்கலாம்.
- துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கலாம்.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு.
அறை எண் 30, யாழ். போதனா வைத்தியசாலை.
தொ. இல : 222 5657
மின்னஞ்சல் : dcpc_jaffna@yahoo.com
இணையம் : www.pillaii.org
C/3926

### புதுக்கடை திறப்பு விழா அழைப்பிதழ்


நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் (23.03.2005)
புதன்கிழமை பிற்பகல் 3.15 மணி தொடக்கம் 5.00 மணி வரையுள்ள
சுப முகூர்த்த வேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள
**சூரியகாந்தி உணவகம்**
என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

116, இராமநாதன் வீதி,
கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

இங்கனம்
தங்கள் நல்வரவை நாடும்
நிர்வாகி, ஊழியர்கள்.
C/3928

சுப்பஸோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப் நிறுவனம், ரவி டிஜிற்றல் ஏ வன் கலர் லாப் என்னும் இணை நிறுவனத்தினை இன்று முதல் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கின்றது

SUPER SHOW DIGITAL
Fuji Film IMAGE SERVICE



Frontier-350

**ரவி டிஜிற்றல் ஏ வன் கலர் லாப்**

- 3R அளவு முதல் 10"x15" அளவுவரை தேவைக்கேற்ற அளவுகளில்.........
- அல்ப வடிவமைப்பு வாழ்த்து அட்டைகள் மற்றும் கலண்டர் அழகுற அமைத்திட...........
- தரமான முறையில் உங்கள் புகைப்படச் சுருள்கள் மற்றும் CD,பிளப்பி,டிஸ்க்,சிப்,mo டிஸ்க் ஆகியவற்றில் இருந்து சிறந்த முறையில் பிரதி செய்து பெற்றிட..................

உங்கள் அனைத்து டிஜிற்றல் வேலைகளுக்கும் ரவி டிஜிற்றல் ஏ வன் கலர் லாப்புடன் இணையுங்கள்
அனைத்து புகைப்படத்துறையினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222082

இப்படிக்கு
நிர்வாகத்தினர்

(C/3927)

## வெளிநாட்டவர்கள் திரும்புவதால் சுற்றுலாத்துறையில் 16 வீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் விடுப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்களும், விடுமுறைக்காக இலங்கை வந்த வெளிநாட்டவர்களும் தமது நாடுகளுக்கு மீண்டும் சென்றுள்ளதால், இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெப்ரவரி மாதம் 16 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7 ஆயிரத்தை அண்மித்ததாக காணப்பட்டது. இது ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் ஆயிரத்து 400 இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜேர்மனி மற்றும் பிரிட்டனிலிருந்து வருகைதந்தோரின் எண்ணிக்கையிலும் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆயினும், வழமைக்கு மாறாக அமெரிக்கா, கனடா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவோர் எண்ணிக்கை சிறிது அதிகரித்துள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறை பின்தங்கிய நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஹோட்டல்களின் புனரமைப்பு பணிகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் காணப்படுகின்றன. இவற்றின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைவதற்கு மேலும் சில மாதங்கள் வரை செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுனாமியால் 248 ஹோட்டல்களில் - 47 ஹோட்டல்களின் செயற்பாடுகள் ஸ்தம்பித மடைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

## யாழ். மாவட்டத்தில் 20 பாடசாலைகளை புனரமைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

சுனாமி அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களாகச் செயற்பட்ட 282 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு 11 மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலைகளினதும் புனரமைப்புக்கென 15 முதல் 25 மில்லியன் ரூபா வரை ஒதுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்கொடையாளிகளின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ள பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலை கல்வி அமைச்சு மாவட்ட ரீதியாக வெளியிட்டுள்ளது.

இவற்றில் வடக்கு - கிழக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 44 பாடசாலைகளும், அம்பாறை மாவட்டத்தில் 66 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 32 பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும் புதிய பிரிவு புனர்வாழ்வு அமைச்சுஆரம்பிக்கிறது!

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஜப்பான் அரசாங்கம் 180 மில்லியன் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரும், கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் தேசிய செயற்பாட்டுக் குழுவின் செயலாளருமான கலாநிதி. ஏ.எஸ் குணசிங்கம் இந்தத் தகவலை தெரிவித்தார்.

மேற்படி நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு - இன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் அரசின் சார்பில் அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்கவும், ஜப்பான் அரசின் சார்பில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடாவும் கைச்சாத்திடவுள்ளனர்.

மேற்படி நிதியுதவி மூலம் அமைச்சால் அரம்பிக்கப்படவுள்ள கண்ணிவெடி பிரிவிற்குத் தேவையான இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பயிற்சி பெற்றவர்கள் இந்தப் பிரிவில் இணைந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## பொலிஸ் நிலையத்திலிருந்து ஆயுதங்கள் மாயம்!

(அம்பாறை)

அம்பாறை பிரதான பொலிஸ் நிலையம் மற்றும் ஆயுதக்களஞ்சியம் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் காணாமற் போயிருப்பதாக தெரியவருகிறது.

பொலிஸ் நிலையத்திலிருந்து ஆயுதங்கள் காணாமற் போன சம்பவம் தொடர்பாக, கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் முன்னாள் பொறுப்பதிகாரியின் காலத்திலேயே இந்த ஆயுதங்கள் காணாமற் போயுள்ளதாகவும் அவருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா கல்வியியற் கல்லூரியில் 'ராகிங்'கால் பாதிப்புக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில்!

(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசிய கல்வியற் கல்லூரி மாணவர் ஒருவர் பகிடிவதைக்கு உட்பட்டு, உடல்நிலை பாதிப்படைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இந்த ஆண்டு தெரிவான புகுமுக மாணவரே சிரேஷ்ட மாணவர்களின் பகிடிவதைக்குட்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மாணவனை பகிடிவதைக்குட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இரு மாணவர்களை கல்லூரி நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

மாணவன் பகிடிவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மாணவனின் பெற்றோரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்த ஆண்டிலிருந்து மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தும் சம்பவங்கள் இடம்பெறாது என கலாசார மன்றத் தலைவர் செந்தில் காந்தன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (03)

## ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தில் 50 வீதத்தை இடர்காலக் கொடுப்பனவாக வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் ஐம்பது வீதத்தை இடர்காலக் கொடுப்பனவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம், பொதுச் சேவைகள் சங்கம் கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்க சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே இந்தக் கோரிக்கையை விடுத்தது.

மேல்மாகாண ஆளுநரும் தொழிற்சங்கத் தலைவருமான எஸ். அலவிமௌலானா தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை அரசாங்க பொதுச்சேவைகள் சங்கத்தின் சார்பில் பிரதித் தலைவர் வை.எல்.சுலைமான் லெப்பை செயலாளர் நாயகம் க.நடராஜா ஆகியோர் கலந்து கொண்டு இக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட ஆளுநர் அலவிமௌலானா இது குறித்து ஜனாதிபதி மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் ஆகியோரது கவனத்துக்கு கொண்டுவருவதாகத் தெரிவித்தார்.

## நாட்டில் பணவீக்க அதிகரிப்பால் பாணின் விலை 25 ரூபாவாகும்!

### எச்சரிக்கிறார் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

நாட்டில் என்றுமில்லாதவாறு பணவீக்கம் அதிகரித்து வருவதனால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் உயர்வடையும் அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன தெரிவித்தார்.

பொருட்களின் விலை அதிகரிப்பது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது - நாட்டின் பணவீக்கம் அதிகரித்துச் செல்கிறது. எனவே, பொருட்களின் விலை மேலும் உயர்வடையும் அபாயம் இருக்கிறது.

பாணின் விலை 25 ரூபாவுக்கு உயர்வடையலாம். இதேவேளை, மருந்துப்பொருட்களின் விலையும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீர்க் கட்டணம் ஏற்கனவே அதிகரித்து விட்டது. இந்த நிலையில், மின்சாரக்கட்டணம் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. இலங்கை மின்சாரசபை பாரிய நிதி நெருக்கடியில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது. இவற்றைப்பார்த்துக் கொண்டு ஜே.வி.பி என்ன செய்து கொண்டிருக்கிறதோ தெரியவில்லை.

இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் முடிவுகளின்படி, பணவீக்கம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது. கடந்த வருடம் பெப்ரவரி மாதம் பணவீக்கம் 0.9 ஆக இருந்தது. ஆனால், இவ்வருடம் பெப்ரவரி மாத இறுதியில் 18 சதவீத மாக அதிகரித்துள்ளது.

அரசாங்கம் செயற்படுத்துகின்ற பொருளாதார கொள்கைகள், பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்துவதாகவே அமையும். வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை என்றார்.

## ஐ.நா. அமைப்புக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த ஏழு அமைப்புக்களின் பிரதிநிதிகள் - கொக்கட்டிச் சோலையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளந்திரையனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் - ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தக் கூட்டத்தில் - ஐக்கிய நாடுகள் சபையின் கீழியங்கும் ஐ.எல்.ஓ., யு.என்.எச்.சி.ஆர்., ஐ.ஓ.எல். போன்ற அமைப்புக்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## பாணுக்குக் கட்டுப்பாட்டு விலை நாடாளுமன்றில் சட்டமூலம்

பாணுக்கு கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இதன்படி 400 கிராம் நிறையுள்ள பாணின் விலை 13 ரூபாவாகவும் , 450 கிராம் நிறையுள்ள பாணின் விலை 14 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

அதனை மீறி அதிகவிலைக்குப் பாணை விற்பனை செய்யும் பேக்கரி உரிமையாளர்கள் வியாபாரிகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இவற்றை மீறுவோர் மீது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்.

ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு விலைக்கு 18 ரூபா முதல் 23 ரூபா வரை பாண் விற்பனை செய்யப்படுகிறது. இந்தநிலையில் கோதுமை மாவின் விலையையும், பாணின் விலையையும் குறைக்கும் வகையில் வெளிநாடுகளிலிருந்து கோதுமை மாவை அரசு இறக்குமதி செய்துள்ளது.

அரசு இறக்குமதி செய்துள்ள கோதுமைமாவைப் பழைய விலைக்கே பேக்கரி உரிமையாளர்களுக்கு வழங்கவும், வர்த்தக அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இன்னும் ஒரு சில வாரங்களில் நாடுமுழுவதும் மா விநியோகிக்கப்படுமென்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## திருமலையில் பௌத்த பிக்கு சாகும்வரை உண்ணாவிரதம்!

திருமலையில் உண்ணாவிரதத்தல் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகளில் ஒருவர் நேற்றுமுதல் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

வட கிழக்குப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரோடு செய்து கொள்வதை எதிர்த்தும், பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு நிலையான வீடுகள் அமைத்துத் தரக்கோரியுமே பௌத்த பிக்குகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்த தேரர் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது போராட்டம் பல காலமாக இடம் பெற்று வருகின்ற போதிலும், அரச தரப்பினர் முற்று முழுதாக எமது கோரிக்கையை உதாசீனப் படுத்தி வருகின்றனர். எம்மிடம் பேச்சுவார்த்தை நடத்த அரச பிரதிநிதிகள் எந்த விதமான முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. ஆகவே, இந்தப் போராட்டத்தை சாகும் வரையிலான போராட்டமாக மாற்றியிருக்கின்றேன். இந்தப் போராட்டத்தில் எனது உயிர்போகும் பட்சத்தில் நான் கவலைப்படப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தரம் 1 மாணவர்களின் அனுமதி கல்வி அமைச்சு பொறுப்பேற்பு!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான சகல நடைமுறைகளையும் அதிபர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்திடம் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு, அவற்றைக் கல்வி அமைச்சு பொறுப்பேற்கவுள்ளது.

இந்தப் புதிய நடைமுறை 2006 ஆம் ஆணடுக்கு தரம் 1 மாணவர்களை அனுமதிக்கும் வகையில், கடந்த திங் கட்கிழமையிலிருந்து அமுலுக்கு வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் தரம் 1 இல் மாணவர்களைச் சேர்ப்பதில் ஏற்பட்ட குழறுபடிகளையும், ஒழுங்கீனங்களையும் அடுத்தே ஜனாதிபதியும் கல்வி அமைச்சருமான சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரையின் பேரிலேயே கல்வி அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின் படி, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தரம் 1 இல் சேர்ப்பதற்காக விண்ணப்பங்களை கல்வி அமைச்சுக்கே நேரடியாக அனுப்புதல் வேண்டும்.

ஒரு பிள்ளையின் பெயரில் 3 பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் எனவும், அதேவேளை தெரிவு செய்யப்படும் பாடசாலையில் அனுமதிக்கும் சாத்தியத்தை உறுதிப்படுத்தும் முகமாக அந்தப் பாடசாலையின் அதிபர் அல்லது பழைய மாணவர் சங்கத்தின் கடிதம் என்பன விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இவற்றுடன் பிறப்புச் சான்றிதழ், வீட்டு உறுதிப்பத்திரம், வாக்காளர் இடாப்புப் பதிவு, வதிவிட சான்றிதழ் என்பவையும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கல்வி அமைச்சு இந்த விபரங்களை கணினி மயப்படுத்தி, பகுப்பாய்வு செய்து, மாணவர்களைத் தெரிவு செய்யவுள்ளது.

ஏப்ரல் 12 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப் படிவங்களை தகுதிவாய்ந்த குழுவொன்று பரிசீலித்து, இதில் தேசிய பாடசாலைகளுக்குத் தெரிவாகும் மாணவர்களின் தற்காலிக பெயர்ப்பட்டியல் ஜூன் நடுப்பகுதியில் இணையத்தளம் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடப்படும். இது தொடர்பாக பெற்றோர்களுடைய மேன்முறையீடுகள் ஜூலை மாத நடுப்பகுதிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஓகஸ்ட் முதல் வாரத்தில் இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

இதேவேளை, போலியான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, இவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழைசெய்த உதவியால்
# தோல்வியிலிருந்து தப்பியது நியூஸிலாந்து கிரிக்கெட் அணி!



வெலிங்டனில் நடைபெற்றுவந்த அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி மழை காரணமாக சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருந்த இந்த டெஸ்ட் போட்டியில் முதல்நாள் ஆட்டம் மழையால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இரண்டாவது நாள் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 140 ஓவர்கள் முடிவில் -8 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்களைப் பெற்றநிலையில், ஆட்டத்தை டிக்ளேர் செய்வதாக அறிவித்தது.

இதையடுத்து முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 81.1 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இதனால், நியூஸிலாந்து அணி பலோ ஒன்னாக இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடவேண்டிய கட்டத்தில் - நேற்றுமுன்தினம் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்தப் போட்டியில் ஐந்தாவதும் இறுதி நாளுமான நேற்று நியூஸிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்கோர் வெறும் 3 ஓட்டங்களாக இருந்தபோதே, அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டன.

பிளெமிங் 1 ஓட்டத்துடனும், மார்ஷல் ஓட்டமெதையும் பெறாமலும் - மக்ராவின் பந்துவீச்சில் எல்.பி.



டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் கமிங் - வின்சென்ற் ஜோடி இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது - ஸ்கோர் 37ஆக உயர்ந்தநிலையில், 24 ஓட்டங்களுடன் வின்சென்ற் ஆட்டமிழந்தார்.

அடுத்து கமிங் - அஸ்ரில் ஜோடி ஆடிக்கொண்டிருந்தபோது, மழை குறுக்கிட்டது. 17.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 48 ஓட்டங்களையே நியூஸிலாந்து - பெற்றிருந்தபோது ஆட்டம் சமநிலையில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நடந்த டெஸ்ட் ஒருநாள் போட்டிகளில் தோல்விகண்ட நியூஸிலாந்து அணிக்கு மழையின் உதவியால் இம்முறை தோல்வியைத் தவிர்க்க முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீவ் பக்னர் மீது ஒழுங்கு நடவடிக்கை!



ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில், சச்சின் டெண்டுல்கருக்கு தவறான அவுட் கொடுத்தது குறித்து நடுவர் ஸ்ரீவ் பக்னர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 52 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, ரசாக் வீசிய பந்தை அடிக்கமுயன்றார். அது துடுப்பில் படாமல் கீப்பரிடம் சென்றது. ஆனால் நடுவர் ஸ்ரீவ் பக்னர் அவருக்கு அவுட் கொடுத்துவிட்டார்.

ஆனால் ரி.வி.ரீப்ளேயில் அவுட் இல்லையெனத் தெரியவந்தது. பக்னரின் தவறான முடிவால் ரசிகர்கள் மிகவும் கோபமடைந்தனர்.

டெண்டுல்கருக்கு அவுட் கொடுத்தது தவறானதுதான் என்றும், இது போன்ற தவறுகள் இனிமேல் நடக்காது என்றும் பின்னர் ஸ்ரீவ் பக்னர் மன்னிப்புக் கோரினார்.

இது தொடர்பாக டால்மியாவிடம் புகார் செய்யப்பட்டது. அவர் இந்தப் பிரச்சினையில் பக்னர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை நேரடியாக பக்னர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் புகார் கூறப்பட்டுள்ளதால், அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பசுபிக் ஓபன் ரெனிஸில் சம்பியனானார் பெடரர்!



(இன்டியன் வெல்ஸ்)

பசுபிக் ஓபன் ரெனிஸ் தொடரில் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இந்தத் தொடர் அமெரிக்காவின் இன்டியன் வெல்ஸ் நகரில் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் பெடரர், இரண்டாம் நிலை வீரரான அவுஸ்ரேலியாவின் லெய்டன் ஹெவிட்டை எதிர்த்து விளையாடினார்.


விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் பெடரர் 6-2, 6-4, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆண்டில் பெடரர் விளையாடிய 43 போட்டிகளில் 42இல் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் தோல்வியடைந்த ஒரே போட்டி ரஷ்யாவின் மாரட் சபினுக்கு எதிரான அவுஸ்ரேலிய ஓபன் அரையிறுதி ஆட்டமாகும்.

# உதைபந்தாட்ட போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவினரின் ஆதரவுடன், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமம் லீக் அண்ணா அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், 4.30 மணிக்கு இடம்பெறும் மற்றைய ஆட்டத்தில் வலிகாமம் லீக் ஜேம்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன.

# இங்கிலாந்து 'ஏ' அணியிடம் இலங்கை 'ஏ' அணி தோல்வி!





கொழும்பில் நேற்றுமுன்தினம் இலங்கை மற்றும் இங்கிலாந்து ஏ அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரசல் ஆர்னல்ட் 71 ஓட்டங்களை 80 பந்துகளில் எடுத்தார்.

தகநாயக்க 51 ஓட்டங்களையும், மலிங்க பண்டார 18 பந்துகளில் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஏ அணி வெற்றி இலக்கை எட்டி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

றிக்கி கிளார்க் 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# கரம் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்!

இணுவில் பொதுநூலக சன சமூக நிலையத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரம் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒற்றையர் ஆண் -

முதலாமிடம் - ச.விமல்காந் (யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழகம்), இரண்டாமிடம் ச.சற்குணமூர்த்தி (யாழ்.சென்றலைட் விளையாட்டுக்கழகம்).

ஒற்றையர் பெண் -

முதலாமிடம் - டி.சுகன்யா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), வ.ஜெயந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி).

இரட்டையர் ஆண் -

முதலாமிடம் - தெ.செந்தூரன் (யாழ்.பல்கலைக்கழகம்), செ.பிரதீப் (கொக்குவில் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - ச.விமல்காந், ச. சற்குணமூர்த்தி (யாழ்.சென்றலைட் விளையாட்டுக் கழகம்).

கலப்பு இரட்டையர் -

முதலாமிடம் - டி.சுகன்யா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), மோ.ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - வ.ஜெனனி, இ.சிவனீதன் (இணுவில் இந்துக் கல்லூரி)

# பெங்களூர் டெஸ்டிலும் சிறப்பாகப் பந்துவீசுவாராம்!
## அனில் கும்ளே சொல்கிறார்



(பெங்களூர்)

பெங்களூர் டெஸ்ட் போட்டியிலும் சிறப்பாக பந்துவீசுவேன் என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில், 2ஆவது இனிங்ஸில் கும்ளே 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கினார். அவர் முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

இந்தநிலையில், இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூர் சின்னசாமி அரங்கில் நாளை தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டிக்காக பாகிஸ்தான் அணி வீரர்கள் கொல்கத்தாவில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பெங்களூர் சென்றனர். இந்திய வீரர்களில் ஹர்பஜன்சிங், தினேஷ் கார்த்திக், பாலாஜி ஆகியோர் பயிற்சியாளர் ஜோன் ரைட்டுடன் பெங்களூர் சென்றுள்ளனர். பெரும்பாலான வீரர்கள் இன்று பெங்களூர் செல்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் இரு அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபடாமல், ஓய்வெடுத்தனர். தினேஷ் கார்த்திக் ஜிம் பயிற்சியில் ஈடுபட்டார். பயிற்சியாளர் ஜோன் ரைட், சின்னசாமி அரங்குக்குச் சென்று ஆடுகளத்தைப் பார்வையிட்டார்.

இந்தப் போட்டி குறித்து சுழற்பந்து வீச்சாளர் கும்ளே கூறுகையில் -

கொல்கத்தா டெஸ்டைவிட இந்த டெஸ்டில் சிறப்பாகச் செயற்படுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். உள்ளூரில் நடைபெறும் போட்டி என்பதால் கூடுதல் நெருக்கடி எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

# ஆம்பர் செஸ் தொடர் ஆனந்த் முதலிடத்தில்!




ஆம்பர் செஸ் தொடரில் விஸ்வநாதன் ஆனந்தின் வெற்றிநடை தொடர்கிறது.

இந்தப்போட்டி மொனாக்கோவில் நடைபெற்றுவருகிறது. இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில் விஸ்வநாதன் ஆனந்த், பல்கேரியாவின் வேசலின் தபலோவை எதிர்த்து விளையாடினார்.

அபாரமாக ஆடிய ஆனந்த் 2-0 என்ற முன்னிலையில் தபலோவை வீழ்த்தினார். இதன் மூலம் 4 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். முன்னதாக, முதல் சுற்றில் இவர் ஸ்பெயினின் அலெக்ஷி சிரோவை வீழ்த்தினார். இரண்டாவது இடத்தில் ரஷ்யாவின் பீட்டர் சிவிட்லர் 3.5 புள்ளிகளுடன் உள்ளார்.

# எனது பந்துவீச்சில் தவறில்லை: ஹர்பஜன் சிங் தெரிவிப்பு!

விளையாட்டு



இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சு முறையில் மீண்டும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்டில் ஹர்பஜன்சிங்கின் தூஸ்ரா வகை பந்துவீச்சு சர்ச்சையைக் கிளப்பியது. ஐ.சி.சி.நிர்ணயித்த 15 டிகிரி அளவுக்கு மேல் ஹர்பஜன் கைதூக்கி வீசுகிறார் என்று போட்டி நடுவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். பந்துவீச்சு சர்ச்சையில் அவர் சிக்கிக் கொள்வது இது 3ஆவது முறையாகும்.

இதற்கிடையே தனது பந்துவீச்சுப் பாணியில் எந்தத் தவறும் இல்லை என்று ஹர்பஜன்சிங் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் எனது பந்துவீச்சு குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது. எனது விடயத்தில் நடந்துகொள்ளும்முறை ஏமாற்றம் அளிக்கிறது. நான் ஏற்கனவே அவுஸ்ரேலியா சென்று நிபுணர்களிடம் எனது பந்துவீச்சு குறித்து சோதனை செய்திருக்கிறேன்.

எனது பந்துவீச்சு செயல்முறையில் எந்தவித தவறுமில்லை. கிரிக்கெட் சபைதான் இதுகுறித்து முடிவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பந்துவீச்சு சர்ச்சையால் பெங்களூரில் நாளை தொடங்கும் 3ஆவது டெஸ்டில் ஹர்பஜன்சிங் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# இனிவரும் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவாராம்!
## தினேஷ் கார்த்திக் நம்பிக்கை

இனிவரும் போட்டிகளிலும் கொல்கத்தாவில் ஆடியதுபோன்று சிறப்பாக விளையாடுவேன் என்று இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

ஈடன் கார்டனில் எடுத்த 93 ஓட்டங்கள் சரியான நேரத்தில் அடிக்கப்பட்டது. மிகுந்த நெருக்கடியில் விளையாடினேன். இதன் மூலம் எனக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பெங்களூரில் நடைபெறும் 3ஆவது டெஸ்டிலும் என்னால் சிறப்பாக விளையாடமுடியும்.

ஒருநாள் போட்டியில் விளையாட வாய்ப்புக் கிடைக்குமா என்பது பற்றிச் சிந்திக்கவில்லை. இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடுவது தற்போது எனது நோக்கம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



மாணவர் மலர்

**மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005**

# வினாத்தாள் I

☛ வகுப்பொன்றில் கணிதபாடத்தில் பெற்ற புள்ளிகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அட்டவணை பின்வருமாறு.

| புள்ளி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 0 தொடக்கம் 30 வரை | 12 |
| 31 தொடக்கம் 50 வரை | 30 |
| 51 தொடக்கம் 75 வரை | 24 |
| 76 தொடக்கம் 100 வரை | 08 |

☛ இல 01 முதல் 05 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1) 614 2) 74 3) 101 4) 47

02. சித்திப் புள்ளி 51 எனின் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?
1) 74 2) 62 3) 32 4) 24

03. விசேடசித்திப் புள்ளி 76 எனின் விசேடசித்திபெற்றோர் எத்தனை பேர்?
1) 08 2) 32 3) 74 4) 24

04. சித்தியடைந்தோர் எத்தனை பேர்?
1) 12 2) 42 3) 74 4) 32

05. சித்தியடைந்த மாணவர்களை உரோம எண்ணில் எழுதுக?
1) xxxii 2) iixxx 3) viii 4) xxv

☛ கீழேதரப்பட்டுள்ள பாடல்களை வாசித்து இல 06 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

*கல்லைச் சிற்பி கண்டனன்*
*கண்ணைக் கவரும் சிற்பமாய்க்*
*கல்லை மாற்றி அமைத்தனன்*
*கண்ட மக்கள் போற்றினர்*
*மண்ணைக் குயவன் கண்டனன்*
*மக்கள் தாகம் தீர்த்திடும்*
*தண்ணீர் வைக்கும் பானையாய்*
*மண்ணை நொடியில் மாற்றினன்.*

06. கல்லைக் கண்டது யார்?
1) மக்கள் 2) சிற்பி 3) மண்

07. கல்லை எவ்வாறு மாற்றினான்?
1) சிற்பி 2) சிற்பம் 3) கல்

08. குயவன் எதைக் கண்டான்?
1) தண்ணீர் 2) பானை 3) மண்

09. மக்கள் தாகம் தீர்ப்பது எது?
1) குயவன் 2) நீர் 3) பானை

10. போற்றினர் என்பதன் நிகழ்கால வடிவம் யாது?
1) போற்றினர் 2) போற்றுவார் 3) போற்றுகின்றனர்

☛ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் கூற்றின் எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.

11. அல்லும் பகலும் என்பது இரட்டைமொழியாகும். (......)
12. உயர் மெய் எழுத்துக்கள் 216 ஆகும். (......)
13. கள்வன் கள்வன் என்பது இணைமொழியாகும். (......)
14. வானம்பாடி குறுகுறுக்கும். (......)
15. இலங்கையின் தேசியப் பறவை மயில் ஆகும். (......)
16. அடிப்படை நிறங்களில் ஒன்று மஞ்சள் ஆகும். (......)
17. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று கிளித்தட்டு ஆகும். (......)
18. பிளாஸ்டிக் பொருட்களினால் சூழல் மாசடையும். (......)
19. காந்தியடிகள் சிரவணன் நாடகத்தை எழுதினார். (......)
20. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் எடிசன். (......)

☛ கீழே உள்ள சொற்களில் வித்தியாசமான சோடிச் சொற்களின் கீழ் கோடிடுக.

21. 1) மதி - சந்திரன் 2) பரி - குதிரை
3) ஊண் - இறைச்சி 4) நாண் - கயிறு

22. 1) காகம் - எச்சம் 2) யானை - இலத்தி
3) வண்டு - பாடும் 4) நெல் - மணி

23. 1) யானை - கத்தும் 2) அணில் - கீச்சிடும்
3) பாம்பு - சீறும் 4) குரங்கு - அலப்பும்

24. 1) ஆசியா - கண்டம் 2) நதி - களனி
3) நைல் - பாலைவனம் 4) மலை - பீதுருதாலகால

25. 1) சிங்கம் - மாமிசம் 2) பூனை - எலி
3) ஆடு - பூச்சி 4) பாம்பு - தவளை



26 - 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

26. மரம் ............... 27. உணவு ...............
28. மலர் ............... 29. மழை ...............
30. புத்தகம் ...............

31 - 35 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.

31. දහය ............... 32. පොත ...............
33 ගටල්ලී ............... 34. බත ...............
35. පුටුව ............... 36. කිරි ...............

இல. 37-39 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் உணவுகளை அட்டவணைப்படுத்துக. கரட், லீக்ஸ், மீன், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, இறைச்சி, மரவள்ளிக் கிழங்கு, முட்டை, வெண்டி, பீற்றூட், பயற்றங்காய்.

| 37. மரக்கறிகள் | 38. கிழங்குகள் | 39. மாமிச வகை |
|---|---|---|
| ............... | ............... | ............... |
| ............... | ............... | ............... |
| ............... | ............... | ............... |
| ............... | ............... | ............... |

40. உமக்குத் தெரிந்த கீரை வகைகள் மூன்றினை எழுதுக.
1. ...............
2. ...............
3. ...............

❖ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

41. இலங்கையில் தேயிலை விளையும் பிரதேசங்கள் இரண்டினை எழுதுக.
1. ...............
2. ...............

42. தமிழர் தமது சமய வழிபாட்டுக்காகப் பயன்படுத்தும் இசைக் கருவிகள் இரண்டைத் தருக.
1. ...............
2. ...............

43. இலங்கையின் தேசிய மரம் எது?
...............

44. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?
...............

45. சுத்தமான நீரின் இயல்புகள் இரண்டு தருக?
...............

46. மனிதனின் சாதாரண வெப்பநிலை எது?
1. ...............
2. ...............

47. பாற்பற்கள் எத்தனை?
...............

48. மண்ணரிப்பைத்தடை செய்வதற்குப் பின்பற்றப்படும் இரு முறைகளைஎழுதுக?
1. ...............
2. ...............



49. 5kg தேயிலையைஒவ்வொன்றும் 200g கொண்டதான எத்தனை பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?
...............

50. 1kg சீனியின்விலை 39.00 எனின் 500 g சீனியின் விலை யாது?
............. ரூபா ........... சதம்...........

❖ பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக?

51. பி.ப ...............
52. ம.ப.பா. ...............

❖ பின்வரும் உபகரணங்களின் பொருத்தமான பெயர்களை 53-56 வரை எழுதுக.

53. ............... 54. ...............




55. ............... 56. ...............

❖ நான் வளர்த்த நாய்குட்டி என்னும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
ஒவ்வொருவாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் இருத்தல்வேண்டும்.
...............
...............

**ஆசிரியர்:- அம்பிகைபாகன்.**

# வினாத்தாள் II

❖ பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு இது. நாட்டின் எழுபது சதவிகிதப் பகுதி மனிதர்கள் வசிக்க முடியாத மலைகளும், பனி ஆறுகளும் நிறைந்துள்ளன. நோர்வே நாட்டின் தலை நகர் 'ஒஸ்லோ' ஆகும். அந்நாட்டு நாணயம் குரோனர் ஆகும். அந்நாட்டில் தொண்ணூற்றொன்பது சத வீதமானவர்கள் எழுத்தறிவு உள்ளவர்களாவர். கற்றலுக்காக வாசிப்பதற்கு மாணவர்களை வழிபடுத்தும் போது ஆசிரியர்கள் பொருத்தமான நூல்களைத் தரமான தெரிவு செய்து கொடுப்பது அவசியமாகும். எனவே ஆசிரியர்கள் நூல்களை வாசித்து தரமான நூல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு அவர்களிடமே உள்ளது என்பதை கவனத்திற் கொள்க.

1. இப்பந்தி எந்நாட்டைப்பற்றிக் கூறுகின்றது?

2. இந்நாட்டில் எப்பொழுது சூரியன் உதயமாகும்?

3. ஒஸ்லோ எந்நாட்டின் தலைநகரமாகும்?

4. ஆசிரியர்கள் மாணவர்களை கல்விகற்க எவ்வாறு வழிவகுக்க வேண்டும்?

5. ஆசிரியர் என்பதன் ஒத்தகருத்துச் சொல் இரண்டு தருக?

6. நோர்வே நாட்டு நாணயத்தின் பெயர் யாது?

7. நோர்வே நாட்டில் எழுத்தறிவு உள்ளவர்கள் எத்தனை சதவீதமாகும்?

8. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
   i) சூரியன் ii) ஆசிரியர்

9. பின்வரும் பந்தியிலுள்ள வினைச் சொற்கள் இரண்டு தருக?

10. நள்ளிரவு என்பதைப் பிரித்து எழுதுக.

11. 73250 மூன்றின் இடப் பெறுமானம் யாது?

12. மு.ப 7.45 ஐ நியம நேரத்தில் எழுதுக.

13. 15 m நீளமான துணியை ஒருவருக்கு 50 cm வீதம் எத்தனை பேருக்கு வெட்டிக் கொடுக்கலாம்?

14. 1, 3, 6, 10, 15, ☐, 28, ☐ இவ்வெண் கோலத்தில் வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய எண்கள் எவை?

15. தீபன் ரூபா 10.00 வீதம் இரண்டு பயிற்சிப் புத்தகங்களும், ரூபா 3.00 வீதம் ஐந்து பென்சில்களும் விலைக்கு வாங்கினால் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

16. 17 ஐ உரோம எண்ணில் எழுதுக.

17. 3 பென்சில்களின் விலை ரூபா 15.00 எனின் 1 டசின் பென்சில்களின் விலை யாது?

18. ..........4000 ...... முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் எழுதுக?

19. இருபதாயிரத்து நானூற்றொன்று என்பதை இலக்கத்தில் எழுதுக?

20. 4 x 5 = ☐ x ☐ = 20 வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண்களை எழுதுக.

❖ பின்வரும் பாடலை வாசித்து இல 21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

***மரம் நடுவோம் செடி நடுவோம்***
***மண்ணரிப்பை தடுத்திடுவோம்***
***மலர் பறிப்போம் கனிகள் உண்போம்***
***மழை நிறையப் பெற்றிடுவோம்.***

21. பாடலில் உள்ள பெயர்ச்சொற்கள் இரண்டினை எழுதுக.


22. மலர் என்பதற்கு ஒத்த கருத்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.

23. மண்ணரிப்பு என்பதைப் பிரித்து எழுதுக.


24. நடுவோம் என்பதன் நிகழ்காலச் சொல்லினை எழுதுக.

25. உண்போம் என்பதன் ஒருமைச் சொல்லினை எழுதுக.

☛ கீழே தரப்பட்டுள்ள A, B, C, D ஆகிய நான்கு உருக்களில் சமஅளவான பரப்பளவைக் கொண்ட இரு உருக்களைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.




☛ கீழே காணப்படும் உருவை அவதானித்து அதற்குரிய வினாக்களுக்குரிய விடையை எழுதுக.




26. சதுரத்துக்குரிய எழுத்து எது?

27. வட்டத்துக்குரிய எழுத்துக்கள் எவை?


28. முக்கோணம், சதுரம், வட்டம் ஆகியவற்றுக்குரிய எழுத்துக்கள் எவை?

29. முக்கோணத்துக்குரிய எழுத்து யாது?


30. சதுரத்துக்கும் வட்டத்துக்கும் உரிய எழுத்துக்கள் எவை?

31. ஈசன் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான் பெற்றோர் அவனை பாடங்களைப் படிக்கும் படி அறிவுரை கூறுவர். ஈசன் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. ஈசனின் பெற்றோர்களுடைய செயலை விவரிக்கும் விடையின் கீழ் கோடிடுக.
   1) அது குளிக்கப் போய்ச் சேறு பூசியது போன்ற செயலாகும்.
   2) அது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற செயலாகும்.
   3) அது குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போன்ற செயலாகும்.


32. பின்வரும் கோலத்தைப் பார்த்து இக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?





33. இவ்வுருவத்திலிருந்து எத்தனை சதுரங்கள் பெறலாம்.



34. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்.




35. இச்சமபக்க முக்கோணியின் சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



முதலாவது படத்தில் தரப்பட்டுள்ள படத்துடன் தொடர்புடைய, மிகவும் பொருத்தமான உருவை ஏனைய படத்தில் உருக்களில் தெரிவு செய்து கீழ் கோடிடுக.

36.
37.
38.
39.
40.



# உலக உணவுத் திட்டப் பணிகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் குலோத்துங்கம்

(கரவெட்டி)

உலக உணவுத்திட்டத்தின்மூலம் மனித வலுவைப் பயன்படுத்தி கிராம, நகர்ப் புறங்களின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உலக உணவுத்திட்டம் - நிவாரணம் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு தமது பங்களிப்பை மேலும் விஸ்தரிக்கவுள்ளதாக - அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அ.குலோத்துங்கம் தெரிவித்தார்.

கடந்தவாரம் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகெணடு தமது திட்டம் தொடர்பாக விளக்கவுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

உலக உணவுத்திட்டச் செயற்பாட்டின்கீழ் அரிசி, மா, சீனி, பருப்பு என்பன வழங்கப்படுகின்றன. திட்டமிடப்படும் வேலைகளின் தன்மையைப் பொறுத்து மனிதவலு எவ்வளவு என்பது கணக்கிடப்படும். அதன்படி அதற்கான முழுத்தொகையும் உணவாகவே வழங்கப்படும். செயற்படுத்தப் படவிருக்கும் வேலைகள் அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் - பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், திணைக்களங்கள் ஆகியவற்றின் சிபாரிசுக்கமைவாக பொது அமைப்புக்களின் உதவியுடன் செயற்படுத்தப் பட்டுவருகிறது.

வேலைகள் - பொது வேலைத்திட்டம், மக்கள் குடியிருப்பு வேலைத்திட்டம் என இரண்டாக வகுக்கப்படும். பொது வேலைத்திட்டத்தில் பாதைகள் செப்பனிடப்படல், குளங்கள், வடிகால்கள் புனரமைப்பு, மயானங்கள் செப்பனிடல், விளையாட்டு மைதானம் அமைத்தல், செப்பனிடல், மரம்நடுகை, பாதீனியம் போன்ற சூழலையும் மண்வளத்தையும் மாசுபடுத்துவனவற்றை அழித்தல் போன்ற விடயங்களைக் கொண்டிருக்கும்.

மக்கள் குடியிருப்பு சம்பந்தமான வேலைத்திட்டங்களில் காணியுள்ளவர்களின் மலசலகூடம் திருத்துதல், வீடு இடிபாடுகள் துப்புரவு, கிணறு அமைத்தல், துப்பரவாக்கல், வேலிகள் அமைத்தல், புனரமைத்தல் போன்றவையாகும்.

மேற்படி வேலைகளில் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், திணைக்களங்கள் தமக்குத் தேவையான வேலைத்திட்டங்களை இனங்கண்டு உத்தேச மதிப்பீடுகளுடன் - அரசாங்க அதிபரூடாக திட்டங்களை ஆரம்பித்து உலக உணவுத் திட்டத்தின் பயனைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (13)

## கரப்பந்தாட்டப் போட்டி

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப்போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சட்டநாதர் சிவன்கோயிலடி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டிகள் காலை 8.30 மணிமுதல் இடம்பெறுவதுடன் - பெண்களுக்கான போட்டி மாலை 4.30 மணிக்கும், அன்றைய தினமே இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (113)

## இலக்கியப் பகிர்வு

ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு இலக்கியப் பகிர்வு இடம்பெறவுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த இலக்கியப் பகிர்வில் - 'தற்கால கவிதைகளின் போக்கு' எனும் விடயம் தொடர்பாக ந.சத்தியபாலன் கருத்துரை வழங்கவுள்ளார்.

## எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு, கொரிய நிறுவனம் ஒன்றால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 600 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை கொரியாவின் கொய்க்கா நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜனின் சிபார்சின் பேரிலேயே இந்த உபகரணங்கள் எழுவைதீவு பகுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (113)


## புதுவையின் கவிதை நூல் வெளியீட்டு விழா லண்டனில்

கவிஞர் புதுவை இரத்தினதுரை கடந்த பத்தாண்டுகளாக எழுதிய கவிதைகளின் தொகுப்பாகிய 'பூவரசம் வேலிகளும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு லண்டன் ரூற்றிங் முத்துமாரியம்மன் கோவில் சிவயோக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணியும், கவிஞருமாகிய ந.சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் மங்கள விளக்கை வைத்திட கலாநிதி ஆனந்தி கருணைலிங்கம் ஏற்றிவைக்க, ரி.ரி.என் தொலைக்காட்சியைச் சேர்ந்த கைலாசபதிவாசன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை நா.சோமாஸ்கந்தசர்மாவும், ச.ஸ்ரீரங்கனும் வழங்குகின்றனர். சிறப்புரையை கலாநிதி பற்றிமாகரனும், வெளியீட்டுரையை ஊடகவியலாளர் பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்தவுள்ளனர். சிவயோகம் அதிபர் நா.சீவரத்தினம் நூலை வெளியிட்டு வைக்க - முதற்பிரதியை கமலநாதக் குருக்கள் பெற்றுக்கெள்வார். மதிப்பீட்டுரைகளை பி.பி.சி மூத்த அறிவிப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசமும், ஊடகவியலாளர் ஏ.சி.தாசீசியஸும், கவிஞர் கருணானந்தராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். கவிஞர் பாலரவி நன்றியுரை நிகழ்த்த, கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவுள்ளன.

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாகிய 500 பக்கங்களில் இந்த நூல் வெளியிடப்படுகின்றது. இந்த நூலின் வெளியீட்டாளர்களான நங்கூரம் பதிப்பகத்தினர் மிக விரைவில் தாயகத்திலும் நூலை வெளியிட ஆவன செய்து வருகின்றனர். இந்த நூலுக்கான முன்னுரையை பேராசிரியர்




கா.சிவத்தம்பி எழுதியுள்ளார்.

இந்தவிழாவின் நினைவாக நூல் வெளியீட்டு விழா மலர் ஒன்று அன்றையதினம் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சாவல்கட்டு மாணவர் முன்னேற்ற நிலையத்தில் கல்விகற்கும் சுமார் 200 மாணவர்களுக்கு நீடோ நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

சாவல்கட்டில் சிறப்பாக இயங்கி வரும் மாணவர் முன்னேற்ற நிலையத்தின் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக அங்கு கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் ஏனைய பயிற்சிப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்குவதுடன், மாணவர்களுக்கு மேலும் தம்மாலான உதவிகளை வழங்குவதாக நீடோ நிறுவனத்தினர் மேற்படி நிலையத்துக்கு உறுதியளித்துள்ளதாக தெரியவருகிறது. (44)

## சாவகச்சேரி கடைகளில்
## பாவனைத்திகதி முடிவடைந்த குளிர்பானங்கள் கண்டுபிடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் கடந்த டிசெம்பர் மாதத்துடன் பாவனைத்திகதி முடிவடைந்த கொக்கோகோலா சோடா விற்பனை செய்யப்பட்டுவந்தது பொது சுகாதார பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக வர்த்தக நிலையங்கள் தாம் கடந்த சில நாட்களில் தான் மேற்படி கொக்கோகோலா - முகவர்களால் தமக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து இத்தகைய சோடாக்களை உற்பத்தி நிறுவனத்திடம் மீள ஒப்படைக்கும்வரை பாதுகாப்பாக வைக்கும்படி சுகாதார பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர். (29)

## மணல் திருடியவருக்கு நீதிமன்றில் அபராதம்

கடந்த வாரம் நள்ளிரவுவேளை லொறி ஒன்றில் மணல் ஏற்றி வந்ததாக கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து கடந்த வாரம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நள்ளிரவு பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின்போது கோப்பாய்ச் சந்தியில் சந்தேகத்திற்கிடமான முறையில் லொறியில் மணல் ஏற்றிவந்த போது, கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள வீட்டு மதில் ஒன்றுடன் மோதிய சமயத்தில் தப்பியோடியபோதே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா குற்றப்பணமாகவும், வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். ஏற்றிவந்த மணலை புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள நீதிமன்றக் கட்டடத்துக்கு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (82)

## பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் யாழ்.குடாநாட்டில் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, யாழ்.பல்கலைக் கழக ஊடகப்பயிற்சிவள நிலையத்துடன் இணைந்து குடாநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் சிவில் சமூகத் தலைவர்களுக்கும் இரண்டு வெவ்வேறு கருத்தரங்குகளை எதிர்வரும் 26 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் இலக்கம் 84,ஜீம்மா மஸ்ஜித் ஒழுங்கையிலுள்ள ஊடகவள பயிற்சி நிலையத்தில் நடத்தவுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கு 'பத்திரிகைத் துறையில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவையும் சட்ட விதிகளும்' என்றதலைப்பில் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெறும்.

சிவில் சமூகத் தலைவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பத்திரிகைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான உறவும், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு 29 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்தோடு யாழ். ஊடக வள பயிற்சி நிலையத்தில் ஊடகத்துறையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கருத்தரங்குகள் அனைத்தும் மேற்படி முகவரியில் அமைந்துள்ள ஊடகப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்குகளில் பங்குபற்ற விரும்பும் பத்திரிகையாளர்கள்மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் அழைப்பிதழ் கிடைக்காவிட்டாலும் உரிய நேரத்தில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ஞா.யதுர்ஷா
முகவரி : இரணைப்பாலை

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------
------------------------
முகவரி :------------------------
------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


## பனம்பொருள் உற்பத்திச் சங்கம் எழுவைதீவில் திறக்கப்படவுள்ளது

(எழுவைதீவு)

எழுவைதீவில் பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கக் கிளையொன்று இன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் கடந்த வாரம் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெற்றதுடன், இந்தச் சங்கத்திற்கான நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது.

எழுவைதீவில் உற்பத்தி செய்யப்படும் பனம் பொருள் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் - சந்தைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கவும் இந்தச் சங்கம் மூலம் வாய்ப்புக் கிட்டும் என்பதுடன் இந்தக் கற்பகக் கிளை கடந்த பதினைந்து வருடங்களாக நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக செயற்படாதிருந்து தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் எழுதிய 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 27 ஆம் திகதி சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக மாணவன் ச.பாலசண்முகனும் ஆசியுரைகளை சு.செல்லத்துரை, நல்லை ஆதீன முதல்வர் ஆகியோரும் வாழ்த்துரையை சைவப்புலவர் ஏ.அனுஷாந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

சிவஜோதி நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்பீட பேராசிரியர் சபா.ஜெயராசா நிகழ்த்தவுள்ளார். நூலின் முதற்பிரதியை நல்லூர் ப.நோ. கூட்டுறவுச்சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி பெற்றுக் கொள்வார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலணையில் திருச்சபை தேவாலயம் திறந்துவைப்பு

(வேலணை)

வேலணை தென்னிந்திய திருச்சபை தேவாலயம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மீளமைக்கப்பட்ட ஆலயத்தின் திறப்புவிழா இடம்பெற்றது. ஆலயத்தை வைபவரீதியாக யாழ்.ஆயர் திறந்துவைத்து வழிபாட்டை நடத்தினார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக மிகவும் மோசமான முறையில் சேதமடைந்து வழிபாடுகள் செய்யமுடியாத நிலையில் ஆலயமும், வளாகமும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் குமா சிறுவர் பூங்கா திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்மாணிக்கப்பட்ட மாவீரர் லெப்டினன்ட் குமா நினைவு சிறுவர் பூங்கா திறப்புவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு குமா சிறுவர் பூங்கா நிர்வாகி அ.எ. பிமான்சீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர் திலகர், கிளிநொச்சி மாவட்ட இணைய தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசி யக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நிறுவனங்களின் கொடிகள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர் குமாவின் திருவுருவப்படத்திற்கு சகோதரன் சிதம்பரநாதன் ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். சிறுவர் பூங்காவின் பெயர் பலகையை செல்வராசா திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து கட்டடங்களின் திறப்புவிழா இடம்பெற்றது.

அலுவலகக் கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப் பணிப்பாளர் திலகர் திறந்து வைத்தார். கற்பித்தல் கூடத்தை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் திறந்து வைத்தார். கலைக் கூடத்தை ஊரக வளர்ச்சி குழுத் தலைவர் கிருஷ்ணசாமி திறந்து வைத்தார். பராமரிப்புக் கூடத்தை மக்கள் தொடர்பகத்தைச் சேர்ந்த வின்சன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை தமிழர் புனர்வாழ்வு கழக திட்டப் பணிப்பாளர் திலகர் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை பூங்குன்றன், கணேசபிள்ளை, கிருஷ்ணசாமி ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் நன்றியுரையை பூங்கா ஆசிரியர் றஜிகலா நிகழ்த்தினார்.

# ஆனையிறவு உப்பள ஊழியர்களுக்கு இதுவரையில் சம்பளம் வழங்கப்படவில்லை

ஆனையிறவு உப்பளத்தில் கடமைபுரிந்த 268 ஊழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்றுவரை சம்பளம் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

பரந்தன் மகாவித்தியாலயத்தில் அண்மையில் உப்பு கூட்டுறவு அலுவலரும், ஆனையிறவு உப்பளக் கூட்டுறவுச் சங்க தலைவருமான கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் ஊழியர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 95 ஊழியர்களுக்கும், வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த 173 ஊழியர்களுமாக 268 ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரையில் வழங்கப்படாததையிட்டு தாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியபோதும் இது தொடர்பாக எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

நாம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருப்பதால் தான் எந்தவிதமான கொடுப்பனவுகளை வழங்காது எம்மை அரசு ஏமாற்றி வருகின்றது.

இதில் 13 இற்கும் மேற்பட்டோர் வறுமை, நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இது சம்பந்தமான இறுதித் தீர்வை எடுத்து எமக்கான கொடுப்பனவுகளை விரைவில் வழங்கவேண்டும் என தொழில் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளோம். அவர் மிக விரைவில் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார் என இலங்கை வர்த்தக சங்க கிளிநொச்சி இணையச் செயலாளர் தெரிவித்தார். (க)




# பாதிக்கப்பட்ட வடமராட்சிக் கிழக்கு பகுதிக்கு சுகாதாரசேவை பிரதிப்பணிப்பாளர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசக் கிராம மக்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு விஜயம்செய்த அவர் வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்களைச் சந்தித்து வைத்தியசாலையின் தேவைகள், குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

புதிதாக அமைக்கப்பட்டு சுனாமி அனர்த்தத்தால் முற்றாக அழிந்துள்ள உடுத்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்ட அவர் அதற்குப் பதிலாகப் பிறிதொரு இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதாகவும், செம்பியன்பற்று கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உதவி செய்வதாகவும் தெரிவித்தார்.

போர் அனர்த்தங்களால் முற்றாக அழிக்கப்பட்ட முள்ளியான் மத்திய மருந்தகம், வைத்திய அதிகாரி தங்கும் விடுதி ஆகியவற்றை மீண்டும் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் -வடமராட்சி கிழக்குப் பிரதேச கிராமங்களில் சுகாதார சேவை வெளிக்கள வேலைகள் நடைபெற ஒழுங்குகள் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (21)

## பங்குனி உத்தரப் பொங்கல்

(கிளிநொச்சி)

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

அத்துடன் வழமைபோல் மீசாலை-புத்தூர்ச்சந்தி பண்டமரவடியிலிருந்து A-9 வீதி ஊடாக நாளை பண்டம் எடுத்துவரப்பட்டு பொங்கல் தினத்தன்று ஆலயத்தைச் சென்றடையவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (கு)

# மன்னார் மாவட்ட மாதர் சங்கங்களினூடாக தமிழீழ காவல்துறையினரின் கருத்தரங்குகள்

மன்னார் மாவட்டத்தின் நாச்சிக்குடா, இலுப்பைக்கடவை, குமுழமுனை ஆகிய பிரதேசங்களின் மாதர் சங்கங்கள் ஊடாக தமிழீழ காவற்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவினரால் அந்த பிரதேச பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

நாச்சிக்குடாப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாச்சிக்குடா காவல்பணிமனைப் பொறுப்பாளர், உப பரிசோதகர் ந.குகநாதன் தலைமையில் நாச்சிக்குடா மாவீரர் மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காவற்துறை பணிமனையில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளினால் பெண்கள் பாதிப்புறுவது பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர் பொ.பவானியினால் பெண்கள் - பாலியல் தொடர்புகளால் பாதிக்கப்பட்டுவது பற்றியும் அவ்வாறு நிகழாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய விழிப்புணர்வு செயற்பாடுகள் பற்றியும், தமிழீழ நீதிமன்றங்களுடாக மேற்கொள்ளும் சட்ட நட வடிக்கை பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. இதேபோன்ற கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் இலுப்பைக் கடவை பாடசாலையில் பிரதேச மகளிர் பொறுப்பாளர் கவிப்பிரியா தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் - இலுப்பைக் கடவை காவற்துறை பணிமனைப் பொறுப்பாளர், உப பரிசோதகர் க. தேவதாஸ் உரை நிகழ்த்தினர்.

பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கை தமிழீழ காவற்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொ.பவான் நிகழ்த்தினார்.

இதேவேளை குமுழமுனைப் பிரதேசத்தில் மாலை 4 மணியளவில் குமுழமுனை மாதர்சங்கத் தலைவி இந்திராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - பரிசோதகர் பொ. பவானி கருத்துரை வழங்கினார்.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயங்காத நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

பூநகரி கௌதாரிமுனை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காமையால் அந்தப் பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காமையால் -கௌதாரிமுனை, விநாயோடை, கல்முனை, வெட்டுக்காடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 10 கிலோமீற்றர் தூரம் சென்றே வைத்திய வசதிகளைப் பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் - 23

கி.மு. 687 : இன்று பல மணி நேரங்களுக்கு முன்பே சூரியன் மறைந்துவிட்டது.

★ ஜெருசலேமைக் கைப்பற்ற பெரும்படை கொண்டு வந்த ஒஸ்திரிய மன்னர் சென்னாச் ஷெரீப்புடைய படைவீரர்கள் தங்கியிருந்த இடத்தில் வானில் பெரும் இடிமுழக்கம் கேட்டது. தொடர்ந்து ஒஸ்திரிய படைவீரர்கள் 185000 பேர் அந்த இடத்திலேயே கருகி மாண்டனர்.

★ இரவில் புவியே அதிர்ந்து விண்மீன்கள் மழைபோல பொழிந்தன. இவையாவற்றுக்கும் காரணமான ஒரு அபூர்வ வானியல் நிகழ்வு நடந்தது.

1857 : அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஒரு விற்பனை நிலையத்தில் மின்சாரத்தில் இயங்கும் தூக்கி (Lift) முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

1907 : தரைப் போக்குவரத்தில் உதவும் வாடகைக்கார்கள் முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்டன. லண்டனில் ஜெனரல் மோட்டார்கார் கம்பனி - மீற்றர்கள் பொருந்திய வாடகைக்கார்களை முதலில் சேவைக்குவிட்டது.

1918 : ஆங்கிலேயர்கள் அடித்து விரட்டப்பட்டனர் என்ற முழக்கத்துடன் பெர்லினுக்குள் கெய்சர் நுழைந்தார்.

★ இந்தியாவில் முதன் முதலாக தாழ்ந்தப்பட்டடோர் மாநாடு நடைபெற்றது.

1919 : இத்தாலியின் மிலான் நகரில் முஸோலினி தனது பாஸிஸ்ட் கட்சியைத் தொடக்கி வைத்தார். இந்தத் தொடக்க விழாவில் 200 பேர்வரை மட்டுமே பங்குபற்றினர்.

1921 : ஜேர்மனி இந்தவருட மே மாதம் முதல் - தான் செலுத்த வேண்டிய 6000 லட்சம் ஸ்ரேலிங் பவுண்களை செலுத்த முடியாது என அறிவித்தது.

1931 : விடுதலை இலட்சியத்துக்காக மரணதண்டனையை ஏற்றுக் கொண்ட இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

1933 : ஹிட்லர் ஜேர்மனியின் சர்வதிகாரி ஆனார்.

1942 : நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவப்படை - ஜப்பானியப் படைகளுடன் இணைந்து அந்தமான், நிகோபார் தீவுகளைக் கைப்பற்றின.

1956 : பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசாக தன்னை அறிவித்தது. உலகிலேயே முதலாவது இஸ்லாமிய குடியரசுப் பிரகடனத்தை வெளியிட்ட நாடு பாகிஸ்தான் தான்.

1956 : சூடான் குடியரசு நாடாகியது.

1965 : அமெரிக்காவினால் ஜெமினி - 3 என்ற விண்கலம் ஏவப்பட்டது.

1966 : 400 வருடங்களுக்குப் பிறகு ரோமன் கத்தோலிக்க தேவாலய தலைவரும், அங்கிலிக்கன் தேவாலய தலைவரும், ரோமில் உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப்பேசினர்.

1993 : சூமேக்கர் லெவி என்ற வால் வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது. இது 1994 ஜூலையில் வியாழன் கோளில் மோதிச் சிதறியது.

★ உலக வானிலை நாள்.

தொகுப்பு - சந்துரு


# முல்லைத்தீவு மாவட்டத் தபாலகம் தற்காலிக இடத்தில் இயங்கவுள்ளது

சுனாமி அனர்த்தத்தால் முற்று முழுதாகச் சேதமடைந்த முல்லைத்தீவு தபாலகம் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

இந்தத் தபாலகம் முல்லைத்தீவு விளையாட்டு மைதானக் கட்டடத்திலேயே தற்காலிகமாக இயங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தத் தபாலகம் இதுவரை காலமும் முள்ளியவளை உப தபாலகத்தில் இயங்கிவந்தது. சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்த மக்களுக்கான இறப்புப்பத்திரம் எடுப்பது மற்றும் முத்திரைகளைப் பெறுவது போன்ற சிரமங்களை அந்தப்பகுதி மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இந்தக் கட்டடத்தை வழங்குவதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.



புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் கல்மடுநகர் பொது மண்டபத்தைப் படத்தில் காணலாம்.

(படம்:- இராமநாதபுரம் செய்தியாளர்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### படைத்தரப்பினரைக் குழப்பி நிற்கும் தீவுச்சேனை மோதல் சம்பவம்

கடந்த ஞாயிறன்று வெளியான "சண்டே லீடர்" ஆங்கில வாரஇதழ் வெளியிட்ட ஒரு கட்டுரை இதுவரை காலமும் அரசும் இராணுவமும் முற்றாக மறுத்துவந்த ஒரு உண்மையை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி ஆட்சி அதிகார பீடத்தவரின் பொய்யுரைகளை வெளிப்படுத்தியுள்ளது.

கருணாகுழுவா...? அதுபற்றி தமக்கு எதுவுமே தெரியாது, தாம் அத்தகைய எந்தக்குழுவுக்கும் பாதுகாப்போ, ஆதரவோ வழங்கியதும் இல்லை, படைத்தரப்பினருக்கு அவர்களுடன் எத்தகைய தொடர்பும் கிடையாது. கிழக்கில் நடைபெறும் விடுதலைப் புலிகள் மீதான-அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீதான தொடர் தாக்குதல்களை மேற்கொள்வோர் இராணுவக்கட்டுப்பட்டுப் பகுதிகளில் இருந்து வந்தே மேற்கொள்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றெல்லாம் அறிக்கைகளை விடுத்து, தம்மைப் புனிதர்களாக - சமாதான விரும்பிகளாக இதுவரை சுயபிரகடனம் செய்து வந்த ஆளும் தரப்பும், படைத்தரப்பும் இந்தச் செய்தி வெளியானதை அடுத்து எந்தவிதமான கருத்தையும் உடனடியாக வெளிப்படுத்தாது மௌனம் காத்து வந்தனர்.

அந்தச் செய்தி இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள - வெலிக்கந்தபகுதியில் தீவுச்சேனை என்ற இடத்தில் கருணாவின் சகாக்களின் முகாம் ஒன்று அமைந்துள்ளதை புகைப்படஆதாரங்களுடன் வெளியிட்டிருந்தது.

கிழக்கிலிருந்து கருணா என்பவர் தப்பியோடி தலைமறைவாகி அஞ்ஞாதவாசம் ஒன்றை மேற்கொள்ளத் தொடங்கியது - அவரின் நெருங்கிய சகாக்கள் சிலர் படைத்தரப்பினரது பாதுகாப்புடன் தேசவிரோத - தமிழின விரோத நடவடிக்கைகளில் கைக்கூலிகளாக செயற்படத் தொடங்கியமை பல தரப்பினராலும் அறியப்பட்ட விடயமேயாகும்.

கருணா பிரச்சினையை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு வியூகங்களை அமைத்த அரசும், படைத்தரப்பும் கருணாவின் எஞ்சிய சில சகாக்களை வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டும், படுகொலைகளைச் செய்தும், புலிகளை சீற்றங்கொள்ளச் செய்து சமாதானசூழலைக் குழப்பும் நூலோபாயத்துடன் செயற்படத் தொடங்கியபோது சமாதான முயற்சிகளின் எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகத் தொடங்கியது.

இதுகுறித்த,அரசின் மீதான குற்றச்சாட்டுக்களை முற்றாகவே நிராகரித்து ஜனாதிபதியும் உயர்பீடமும் அறிக்கைகளை தொடர்ந்து விடுத்து வந்ததுடன் கருணாவுக்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என வலியுறுத்தியும் வந்தனர்.

ஆனால், அந்த மறுப்புகளையும், நிராகரிப்புகளையும் பொய்யாக்கி விட்ட சண்டே லீடர் செய்தியானது - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினதும் அதன் தலைவியான ஜனாதிபதியினதும் சமாதானம் மீதான இரட்டை நிலையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இந்தச் செய்தி வெளியான சில தினங்களிலேயே குறிப்பிட்ட தீவுச்சேனை தேசவிரோதக்குழுவினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றில் அந்தக் குழுவின் பொறுப்பாளரும், கருணாவின் நெருங்கிய சகாவுமான மங்களம் மாஸ்ரர் என்பவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தமையானது அந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை நிருபணம் செய்துள்ளது.

யார் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார்க்ள் என்பது ஒருபுறமிருக்க, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படைத்தரப்பினரின் அங்கீகாரம், ஆதரவு, அனுசரணையின்றி அவர்களுக்குத் தெரியாமல் ஆயுதக்குழுக்களில் ஏதாவது ஒன்று முகாம் அமைத்து செயற்படமுடியுமா என்ற கேள்வி எழுகின்றதல்லவா?

இந்தக் கேள்விக்கு தீவுச்சேனை - படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இல்லையென்று முன்பின் யோசிக்காமல் பதில் கூறியுள்ள பொலிஸ் தரப்பினர், அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளது என்றும் அறிவித்துள்ளமைதான் கோமாளித்தனமானதாகும்.

சரி, அது புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் என்றால் தீவுச்சேனைப்பகுதியில் சம்பவத்தின் பின்னர் இராணுவமும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளமைக்கு அர்த்தமென்னவாம்?

புலிகளின் பிரதேசத்துக்குள் இராணுவம் அத்துமீறி நுழைவது போர்நிறுத்த மீறலாக அமையுமல்லவா?

பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லும் அறிவு கூடவா இல்லை. தீவுச்சேனைமுகம் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளே இருப்பதால் தான் அந்த முகாமை பாதுகாக்க இராணுவம் செல்லவேண்டியதாயிற்று

அந்த முகாமை புலிகள் ஒரு அணியாக ஆயுதங்களுடன் சென்று தாக்குவதென்பது இந்த நிலையில் சாத்தியமாகுமா என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

இந்த மோதல் கருணா கும்பலுக்குள்ளான உள்முரண்பாட்டு மோதலாகவும் இருக்கலாம் அல்லவா?

## நாடும் நடப்பும்

செய்தி -கதிர்காமருக்கும், ஆனந்தசங்கரிக்கும் பௌத்த - சிங்கள இனம் பெரும் கடமைப்பட்டுள்ளதாம்.
- பேரினவாதிகள் கருத்து



### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அம்மையார் மீண்டும் ஒரு போருக்கு ஆயத்தமாகிறாரா?

அம்மையார் போருக்கு ஆயத்தமாவது போலத் தெரியுது. வேறு வழியில்லையென்றால், போர் தான் கைகொடுக்கும் என்று நினைத்து விட்டாராக்கும் என்று சொன்னபடியே வந்தமர்ந்தார் பரமசிவம்.

வேறு வழியில்லாமல் போருக்குப் போகப் போகிறார் என்ற மாதிரித் தெரிவதாகச் சொல்கிறீர். எதுக்கு வேறு வழியில்லை நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வரும் முயற்சிகள் வெற்றியளிக்காமல் இருப்பதா? சுனாமி அழிவுக்குப் பின் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்கும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு அமைக்கும் முயற்சி இழுபட்டுக் கொண்டு வருவதா? இதனால்தான் அவருக்கு வேறுவழி தெரியவில்லை என்று சொல்கிறாரா? என்று கேட்டேன்.

நீர் ஒன்று! சமாதான முயற்சி, பொதுக் கட்டமைப்பு அமைப்பது போன்றவைகளுக்காகச் சந்திரிகா அம்மையார் பெரிய முடிவுகளை மேற்கொள்ளக்கூடியவரா? ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கு அரசியல் அமைப்பைத் திருத்தி நாடாளுமன்றத்துக்குச் சகல அதிகாரங்களும் வழங்க வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தில் அமையாருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை . ஜனாதிபதி ஆட்சியை ஒழித்து பிரதமருக்கு அதிகாரமுள்ள ஆட்சியைக் கொண்டு வருவதற்கு மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கும், மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். மற்றைய அரசியல் கட்சிகளிலிருந்து ஆட்களைப் பிடிக்கும் முயற்சிகளும் எதிர்பார்த்த படி வெற்றியளிக்கவில்லை. சமஷ்டி ஆட்சிமுறையைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லிப் பார்த்தும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் போவதாகத் தெரிவித்தும், முக்கிய கட்சிகளிடமிருந்து அதற்கு ஒத்துழைப்புக்கிடைக்கும் அறிகுறிகளும் இல்லை. இந்த நிலையில் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்திருப்பதற்குப் போரைதான் மீண்டும் தொடங்கவேண்டும். இது தவிர பேறு வழியில்லை என்று அம்மையார் நினைக்கலாமல்லவா? என்றார் பரமசிவம்.

இப்படி நீர் சொல்வற்கு உம்மிடம் ஆதாரம் என்ன இருக்கிறது என்று கேட்டேன்.

கடந்த 17 ஆம் திகதியென்று நினைக்கிறேன். எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டுச் சந்திரிகா அம்மையார் கூட்டுப் படைத்தலைமையகத்துக்குச் சென்றார். அங்கு படைத்தளபதிகள், படை அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்தார். முன்னாள் படைத் தளபதியும் பின்னர் வடக்கு – கிழக்குமாகாண ஆளுநராகப் பதவி வகித்தவருமான மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன மாஜி பொலிஸ் அதிபர் சிறில் ஹேரத் உட்பட முப்படைத் தள பதிகள், படை அதிகாரிகள் பலரையும் சந்தித்து மூன்று மணி நேரத்துக்கு மேலாக ஆலோசனை நடத்தினார்.

முப்படைகளுக்கும், பொலிஸ் படைக்கும் பொறுப்பான தளபதியாக இருக்கும் ஜனாதிபதி – படைத் தளபதிகளைச் சந்தித்துப் பேசுவதும், கலந்தாலோசனை செய்வதும் பெரும் புதினமல்லவே என்றேன் நான்.

இது புதினம்தான். கூட்டுப் படைத்தலைமை அலுவலகத்துக்கு ஜனாதிபதி சென்று, கலந்தாலோசனை செய்வது அபூர்வமானது தான். விடுதலைப்புலிகளால் ஏற்படக் கூடிய புதிய ஆபத்து பற்றி சந்திரிகா அம்மையார் படைத்தளபதிகளுடனும், படை அதிகாரிகளுடனும் பல கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றாராம். இதே சமயம், இவரது கேள்விகளிலிருந்து படையினர் தாம் மேற்கொள்ள வேண்டியபுதிய யோசனைகளையும் பெற்றனராம்.

விடுதலைப்புலிகள் சொல்லிக் கொள்ளுகின்ற மாதிரி இராணுவ ரீதியில் அதிக பலம் பெற்றிருக்கவில்லையென்று இது பற்றி ஆராய்ந்த குழு தெரிவித்திருக்கிறதாம். சுனாமி நிதி புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் சேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

புலிகள் வடக்கு – கிழக்குக் கடற்கரையோரத்திலிருந்து குடியிருப்புப் பகுதிகளுக்கே மீள் குடியமர்வை வெகு தூரம் நகர்த்துவதற்குத் திட்டமிடுவதாகவும், இது தங்களுடைய படை வசதிகளைக் கருத்திற்கொண்டிருப்பதாகவும் படை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார் பரமசிவம்.

இதன் பின் அமையார் எதுவும் சொல்லவில்லையா? என்று கேட்டேன். இதன் பின் முன்னாள் படைத்தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன, முன்னாள் பொலிஸ் அதிபர் சிறில் ஹேரத், முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தி விட்டுச் சென்றார் என்று கூறிய பரமசிவம் இவை ஆங்கில வார இதழில் இராணுவ ஆய்வாளர் ஒருவர் எழுதிய கட்டுரையிலிருந்து கிடைத்த தகவல் என்றார்.

இதை வைத்துத்தான் அம்மா போருக்கு ஆயத்தமாகிறார் என்று சொல்கிறீராக்கும் என்று நான் கேட்டன். இன்றுள்ள சூழ்நிலையில் அம்மையாரின் இந்தச் செயல் அப்படியும் நினைக்கத் தூண்டுவதில் என்ன தவறு என்று கேட்டார் பரமசிவம்.

சர்வஜன வாக்கெடுப்பு என்றும், சமஷ்டி என்றும் அம்மையார் சொல்லுகிறார். ஜே.வி.பி இதற்கு ஒப்புக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் எதையுமே ஏற்றுக்கொள்வதாகவும் இல்லை. அரசாங்கத்திலிருந்து அவர்கள் வெளியேறப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்களேயொழிய வெளியேறுவதாகத் தோன்றவில்லை. சர்வஜன வாக்கெடுப்பு - நாடு இன்றுள்ள நிலையில் அவசியம்தானா என்று ரணில் விக்கிரமசிங்க வேறு மக்களைக் கேட்கிறார். அம்மையார் என்னதான் செய்யப் போகிறார்? என்றேன்.

சுனாமி நிவாரணப் பங்கீட்டுக்கு அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றை அமைக்கும் நோர்வேயின் வரைபுத் திட்டத்தை, விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டுவிட்டனர். அரசாங்கம் இன்னமும் இதில் ஒரு முடிவையும் தெரிவிக்கவில்லை. அரசும் இதை விரைவில் ஏற்றுக் கொள்ளுமென்றும், பொதுக்கட்டமைப்பு உருவாகுமென்றும் நோர்வே நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்தப் பொதுக் கட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் முயற்சிக்கு முதற்படியாக அமையுமென்றும் சில வட்டாரங்களில் நம்பிக்கையூட்டும் ஊகம் தெரிவிக்கப்படுகிறது என்றார் பரமசிவம்.

பொலனறுவை தீவுச்சேனைப் பகுதியில் நடந்த மோதல் சம்பவம் – அங்கு ஆயுதக் குழுவொன்று செயற்பட்டு வருவதை உறுதிப்படுத்தியிருக்கிறது. இந்தக்குழு அங்கு பாதுகாப்பாக இருந்து கொண்டு, மற்றவர்களுக்குப் பாதுகாப்பில்லாமல் செய்து வந்திருக்கிறது. என்றாலும் இப்பகுதியில் ஆயுதக் குழுவின் முகாம் இருக்கவில்லையென்று படைத்தரப்பில் கூறப்படுகிறது. பச்சைப் பொய்சொல்லியே பாதுகாப்புப்படையினருக்குப் பழக்கப்பட்டுவிட்டது. நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்டேன்.

நீர் சொல்வது முற்றிலும் உண்மை. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதை படைகளும் அவ்வழி என்று சொல்லலாமா? என்றார் பரமசிவம்.

தீவுச்சேனை மாதிரி வசதிவாய்ப்புள்ள இடங்களில் மறைந்திருந்து தாக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதும் விடுதலைப் புலிகள்மீது இதற்கான பழியைப் போடுவதும் சரியான பின்னணியில் வகுத்த திட்டங்களாகவே இருக்க வேண்டும். சில தினங்களுக்கு முன் ஜே.வி.பியின் விமல் விரவன்ச விடுதலைப் புலிகள் செய்யும் கொலைகளை யாரும் கண்டிப்பதில்லை, விடுதலைப் புலிகள் கொலைசெய்யப்பட்டால் கண்டிக்கிறார்கள் என்று கூறியிருந்தார். நமது சங்கூதியார் புலிகள் கொலை செய்கிறார்கள் என்று கடிதங்கள் எழுதி ஊதிக்கொண்டே இருக்கிறார். இவையெல்லாம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி பழியைப் புலிகள் மீது போடுவதற்கான திட்டங்களே என்று சொல்வதில் தவறில்லையல்லவா? என்று சொன்னேன்.

சங்கூதியார் இப்போது எந்த வேலையுமில்லாமல் இருக்கிறார். சிறையிலுள்ள சிலரையாவது விடுதலை செய்யுங்கள் என்று அம்மாவுக்கு எழுதியும், அம்மா திரும்பிப் பார்க்கவில்லை. விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்திப் பெரிய கடிதம் எழுதி, அதை ஊடகங்களுக்கு அனுப்பி வெளிவரச் செய்தால், தனது வேலையில்லாத்திண்டாட்டத்தை அம்மையார் அறிந்து கொள்ளுவார். சங்கர்ராஜிக்கு – மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளர் வேலை கொடுத்த அம்மா, இன்னும் அண்டிப் பிழைப்பவர் சிலருக்கு இப்படி வேலைகொடுத்திருக்கிறார். தனக்கும் ஒரு கூட்டுத்தாபனத்தில் வேலை போட்டுத்தந்து ஆறுதலளிப்பார் என்று சங்கூதியார் இக்கடிதங்கள் மூலம் 'அப்பிளிக்கேஷன்' போடுகிறார் என்று நினைக்கின்றேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் பரமசிவம்.

அரசியர் கட்டுரை... சிலம்பு

# உண்மையை உணர்ந்த உலகமும் சினமடைந்த கதிர்காமரும்





(நேற்றைய தொடர்ச்சி...)

ஜனாதிபதி கூட பொதுக்கட்டமைப்புப் பற்றி வாயளவில் கூறி உலகத்தை ஏமாற்றிக் கொண்டு தான் வருகிறார். பொதுக்கட்டமைப்பின் அவசரத் தேவையை உலகம் அறிந்து கொண்டுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் அழிவுகளுக்கு நிவாரணம் செய்ய வேண்டும். அதற்கு புலிகளின் கருத்துக்கள், செயல்முறைகள் ஆகிய பங்களிப்புக்கள் தேவை என்ற மதிப்பீடு அவர்களிடம் ஏற்பட்டுள்ளது.

அதை அவர்கள் கூறுகின்றார்கள். அப்படி அவர்கள் கூறுவது இவ்வளவு காலமும் பயங்கரவாதிகள் என்று சொன்னதெல்லாம் வீணாகிப் போய்விட்டதே என்ற கவலையில் அவர்கள் மீது சீறிப்பாய்கின்றனர். கதிர்காமரும் ஜே.வி.பியினரும்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியை வெளியேற்ற வேண்டும். என்று தங்களது வழமையான பல்லவியைப் பாடுகின்றனர். வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தனது அறிக்கையில் என்ன கூறியிருந்தார் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் நேரடியாக உதவிகளை வழங்கப் போவதாக அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவித்திருக்கவில்லை. ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான நிதி ஒதுக்கீட்டை செயற்படுத்துவதில் புலிகளின் பங்களிப்புத் தேவையென்று சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன், அரசும் - விடுதலைப் புலிகளும் செய்த உடன்படிக்கையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளதையே தான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

அதாவது, சிங்கள அரசு ஏற்றுக் கொண்டாலும்கூட, மற்றவர்கள் அதை ஏற்கக்கூடாது என்



பதுதான் அவர்களின் கருத்தாக உள்ளது. இதேபோன்றுதான் அமைச்சரவையின் முக்கிய பேச்சாளர் - கௌசல்யனின் கொலையைக் கண்டிக்கிறார். ஆனால், ஐ.நா செயலாளர் நாயகம் அதைக் கண்டித்துக் கவலை தெரிவித்ததைக் கதிர்காமரும், ஜே.வி.பியும் விமர்சிக்கின்றனர். இது ஒன்றை மட்டும் தெளிவாகக் காட்டுகின்றது.

கண்துடைப்புக்காக நாங்கள் கண்டிப்போம், கவலை தெரிவிப்போம். ஆனால், உலகம் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இதை உலகம் ஏற்க மறுக்கின்றது. இதனால் அவர்கள் உதவி வழங்கும் நாடுகளின் கட்டமைப்பில் ஐ.நா இணைவதையும் இலங்கை எதிர்த்துள்ளது. கௌசல்யனின் கொலையைக் கண்டித்ததற்கான பதிலடியாக இவ்வாறு இலங்கை அரசு நடந்து கொண்டுள்ளதாகச் செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உண்மையில் பார்த்தால் இதுவரைகாலமும் செய்த பரப்புரைகள் வீணாகிப் போய்க்கொண்டிருப்பதை ஆளும் வர்க்கம் காண்கிறது. ஏமாற்றிய காலம் முடிவுக்கு வருகிறது. தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கிவிட்டது.

சுனாமி அழிவால் ஏற்பட்ட பாதிப்பை வைத்துச் சிங்கள தேசத்தைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பலாம் என்ற திட்டங்கள் சரிவரமாட்டாது என்ற நிலை தோன்றியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவும் யதார்த்தத்தை உணரத் தலைப்பட்டதால், புதிய பாதைகளைத் தேட வேண்டிய நிலையில் கதிர்காமர் உள்ளார். எனவே ஐரோப்பிய நாடுகள் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி, ஐரோப்பிய யூனியனை நம்பியிருப்பதில் பயன் கிடைக்காது என்று தெரிந்து கொண்டு, எப்படியும் இந்தியாவை இதற்குள் இழுத்துவிட ஆலாய்ப் பறந்து திரிகிறார் சினம் கொண்ட கதிர்காமர்.

ஆனால் உண்மை என்றும் தோற்றதில்லை என்றவகையில், தமிழ் மக்களது உரிமைக்குரல் தோற்றுப் போகாது என்பதே யதார்த்தமாகும்.

ஏமாற்றுபவர்கள் ஏமாந்து போகும் காலம் கூடி வருகிறது. பொய்மை அழிந்துகொண்டு போகிறது. உண்மையை உணர்ந்து கொள்வதால் தமிழர் வாழ்வில் விரைவில் விடியல் தோன்றும். ❀

---

பகுதி ௬௭ சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடுகிறேன். இங்குள்ள பெரும்பாலான சிங்கள வர்த்தகர்கள் தங்களது காணிகளை விற்றுவிட்டு, குருநாகல்போன்ற பகுதிகளில் காணி வாங்கி வீடு கட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கான முதலாவது காரணம் - இங்கு தாங்கள் வாழ்ந்தாலும், இது தமிழருக்குரிய பிரதேசம் என்பதை உணர்ந்துள்ளனர். இரண்டாவது - தமிழருடன் எந்தவொரு மோதலுக்கும் செல்வது தமது வாழ்வுக்குப் பங்கமான நடவடிக்கையாக அமையும் எனக் கருதுகின்றனர். தமது எந்த நடவடிக்கைக்கும் தமிழ்த்தரப்பிலிருந்து இரண்டுமடங்கோ, மூன்று மடங்கோ பதிலடி கிடைக்கும் என நம்புகின்றனர். இதனால்தான் ஜே.வி.பியின் செயலுக்கு அவர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர் எனப் பதிலளித்தார்.

இதனை அவர்கள் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றனரா?' எனக் கேட்டதற்கு பகிரங்கமாக உணர்ந்



துள்ளனர் என்றே கூற வேண்டும். ஏனெனில், மாவீரர்நாள் தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட நகரத்திலிருந்து மிகச் சிலரே கலந்து கொண்டார்கள். இதனால்தான் ஜே.வி.பி வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வரவேண்டியிருந்தது என்றார் அவர்.

'சிங்களவர்களால் திருமலை சந்தை போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய நடவடிக்கைகள் குறித்து என்ன முடிவு எடுத்துள்ளார்கள்?

தொடர்ச்சியாக அதனை எவ்வாறு அனுமதிக்கிறார்கள்?' எனக் கேட்டேன். அதற்கு அவர் 'திருமலை பொதுச்சந்தையிலுள்ள சிங்களவர்கள் உண்மையில் பெரும்பாலும் ஜே.வி.பியின் பின்னணியில் உள்ளவர்கள். ஜே.வி.பியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் - இந்த மீன் வியாபாரிகளும் வர்த்தகர்களும் தான்'.

அவர்கள் கிட்டத்தட்ட 20 லட்சம் ரூபாவுக்கு மேல் நகரசபைக்குச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த நிலுவையைச் செலுத்துமாறு நகரசபை கோரும் போதெல்லாம், வேறு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கெதிராகச் சாட்டுப் போக்குச் சொல்லி அதனைச் செலுத்தாமல் விடுவார்கள்.

முறையாக ஜனநாயக மயப்படுத்தப்பட்ட நகரசபை நிர்வாக அமைப்பு இல்லாத காரணத்தால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரே இந்தக் கடமையைச் செய்கிறார்.

இதில் இன்னொரு விடயம் - உள்ளூராட்சி சபை அதிகாரங்களின்படி, நகரசபைக்குரிய கட்டடங்களைப் பராமரிப்பது, அது தொடர்பான பணிகளை மேற்கொள்வது நகரசபையிடமே உள்ளன. ஆனால், நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன - வட கிழக்கு மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு, உடனடியாக நகரசபை பொதுச் சந்தைக்குள்ளிருக்கின்ற சிங்கள மக்களுக்குரிய வசதியீனங்களை நீக்குமாறு பணிப்புரை விடுத்தார். இதற்கென ஐந்து லட்சம் ரூபா பணத்தை தனது சொந்த நிதியிலிருந்து அனுப்பிவைத்தார்.

இவையெல்லாம் எதைக்காட்டுகிறது? இந்தச் சிங்களவர்கள் அத்துமீறிய செயலையோ, சட்ட விரோதமான எந்தச் செயலையோ புரிந்தாலும் பரவாயில்லை. அவர்களை இங்கே குடியேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் அமைச்சர்களும், அரசும் உள்ளது என்பதையே காட்டுகிறது.

உண்மையில் வெசாக் தினங்கள் வரும்போது இந்தச் சந்தைக்குள்ளிருக்கும் சிங்கள வர்த்தகர்கள் இங்குள்ள தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்களிடம் கட்டாயவரி வசூலிப்பில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு 20 லட்சம்ரூபா பணம் வசூலித்துள்ளனர்.

அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாது. பொதுச்சந்தைக்குள் இருக்கும் சிங்கள அமைப்புதான் இந்தக் கட்டாய வசூலில் ஈடுபடுகிறது. நகர சபையில் ஒரு ஜனநாயக ரீதியான நிர்வாகம் இல்லாததால், பொதுச் சந்தை - ஜே.வி.பியின் ஒரு குகையாக மாற்றப்பட்டுள்ளது என்பதே உண்மை. இவர்களே ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுக்கெதிரான ஜே.வி.பியின் நடவடிக்கைக்குத் துணை போகின்றவர்கள் எனக் குறிப்பிட்டார்.

'சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரணங்களில் நடைபெற்ற மோசடி குறித்து, தங்கள் அமைப்பு சில அறிக்கைகள் விட்டது. இதனைப்பற்றியும் கூறுங்கள்' எனக்கேட்டேன்.

'சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் இங்குள்ள இடம் பெயர்ந்தோருக்கென லொறி லொறியாக பொருட்கள் கொண்டுவரப்பட்டன. இதில் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்துக்கென பிரத்தியேகமாக அனுப்பி வைக்கப்பட்ட பொருட்கள் இராணுவத்தினரின் துப்பாக்கி முனையில் திருமலைக் கச்சேரிக்கு கொண்டு செல்லப்பட்டன. ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட லொறிகள் அங்கு சென்ற போதும், அங்கு எந்தத் திட்டமிடல் நடவடிக்கையும் இருக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர், ஐ.தே.க மற்றும் ஜே.வி.பியினர் கும்பலாக நின்று கொண்டு தங்களுக்கு விருப்பமான பிரதேசங்களுக்கு இந்த லொறிகளைத் திருப்பிச்சென்றனர்.

குறிப்பாக - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் என்று கருதப்படும் பெண்மணியொருவர் அடாவடித்தனமான முறையில் ஐந்துக்கு மேற்பட்ட லொறிப் பொருட்களைக் கொண்டு சென்றுள்ளார்.

அதை எங்கு கொண்டு சென்றார் என்பது யாருக்கும் தெரியாது. அதுபோல ஐ.தே. க அமைப்பாளர் ஐந்து லொறிகளைக் கொண்டு சென்றார். இவற்றுக்கு மேலாக சுனாமியால் எந்தவித பாதிப்புக்குமுள்ளாகாத கோமரன்கடவல, பதவிசிறிபுர, சேருநுவர போன்ற பிரதேசங்களுக்கு 25இற்கும் மேற்பட்ட லொறிகளில் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

அதேவேளை உண்மையாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்களான கிண்ணியா, திரியாய் போன்ற பிரதேசங்களுக்கு ஒரு லொறி சாமான் கூட அனுப்பாத நிலை ஆரம்பத்தில் காணப்பட்டது. அந்தச் சமயத்தில் தான் நாம் புள்ளிவிபரங்களுடன் ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்தோம். இன்னும் கூட இலங்கை கடற்படை தளத்துக்குள்ளும், கச்சேரிக்குள்ளும், அரசின் பல களஞ்சியங்களினுள்ளும் நிவாரணத்துக்கென வந்த பொருட்கள் விநியோகிக்கப்படாது பூட்டி வைக்கப்பட்டுள்ளன. இந்தச் செய்தி பலருக்குத் தெரியாது.

(தொடரும்...)

---

## துவக்காலச் சிந்தனை

"எனது நேரம் நெருங்கி வந்து விட்டது"

[மத்.26:18]

மோ.தார்சியஸ்

இந்தப் புனித வாரத்திலே நமது மீட்புக்கு வழி கோலிய இயேசுவின் திருப்பாடுகளைத் தியானிக்கின்றோம். அவர் துன்புறும் இறை ஊழியனாகவும் .தாழ்ச்சியில் நிறைந்தவராகவும் விளங்குகின்றார். இயேசுவின் பாடுகளை முன்னறிவிக்கும் யூதாஸின் சதி பற்றிப் பார்க்கிறோம். யூதாஸ் ஏழையல்ல இருந்தும் 30 வெள்ளிக் காசுக்காக மூன்று வருடங்களாக இயேசுவோடு உண்டு, உறங்கி, அவர் நற்செய்தியில் வளர்ந்து வாழ்ந்த அவன், கேவலம் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் சதிக்கு உடன்பட்டான்.



அன்று யூதாஸினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சதி –இன்று நாம் வாழும் உலகிலும் பல வழி வகைகளிலே நிறைவேறிக் கொண்டிருக்கிறதை அன்றாட எமது வாழ்வு நிகழ்ச்சிகள் நமக்குத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பணத்துக்காச் சதி, பதவிக்காகச் சதி, அரசியலுக்காகச் சதி, சாதிக்காக கொலை , கொள்ளை, நாட்டுக்கு நாடு எல்லைத் தகராறின் காரணமாகப் போர், மத வெறிக்காகத் தீவைப்பு, உடைப்பு, பாலியல் பலாத்காரம் குறிப்பாக சிறுவர்களை பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி படம் பிடித்தல் எனப் பல வகைகளிலே சதித் திட்டங்கள் தீட்டப்பட்டு மக்கள் மிருகங்களாக வாழ்வதைப் பார்க்கிறோம். இதன் மூலம் இயேசு இன்றும் பாடுகளுக்கு உள்ளாக்கப் படுகின்றார்.

இந்த முக்கிய நாட்களில் இவற்றிற்காக மன்னிப்பு வேண்டி திருந்தி வாழ்வோம்.

# பாடசாலை மாணவன் சுட்டு ஒன்பது பேர் உயிரிழந்தனர்

## அமெரிக்காவில் சம்பவம்



(நியூயோர்க்)

அமெரிக்காவில் பாடசாலை மாணவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் 7 பாடசாலை மாணவர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்ததுடன், துப்பாக்கிப்பிரயோகத்தை நடத்திய மாணவனும் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் அமெரிக்காவில் இந்தியர்கள் பெரும்பான்மையாக வாழும் மினெசோரா பகுதியிலுள்ள பாடசாலையில் நடைபெற்றது.

குறித்த மாணவன் வீட்டிலிருந்த தாத்தா மற்றும் பாட்டியை சுட்டுக் கொன்ற பின்னர் பாடசாலைக்குச் சென்றுள்ளான். அங்கு இவன் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர், பாதுகாப்பு அலுவலர் மற்றும் இரண்டு பெண், ஒரு ஆண் மாணவர்களும் அடங்குவர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் இரண்டு மாணவர்கள் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தனர். இறுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய மாணவனும் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் டசினுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான விசாரணையை அமெரிக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கொலொறடோ பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் இரண்டு மாணவர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 13 மாணவர்கள் உயிரிழந்ததுடன், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர்களும் தம்மைத் தாமே சுட்டு தற்கொலை செய்து கொண்டபின்னர், தற்போது அதனைப் போன்றதொரு பாரிய சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இஸ்ரேல் வசமிருந்த துல்க்காம் நகரம் பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது!



(ரெல் அவிவ்)

இஸ்ரேல் படையினரின் கட்டுப்பாட்டில் இதுவரை இருந்த பலஸ்தீனர்களின் துல்க்காம் நகரம் நேற்றுமுன் தினம் பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, அங்கு பெரும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்ட துல்க்காம் நகரத்தின் பாதுகாப்பை பலஸ்தீன பொலிஸார் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள பலஸ்தீன நகரங்களை ஒப்படைப்பது தொடர்பாக நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுக்களை அடுத்து, ஜெரிக்கோ நகரம் பலஸ்தீனர்களிடம் முதலாவதாக ஒப்படைக்கப்பட்டது. தற்போது இரண்டாவதாக துல்க்காம் நகரம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

இவற்றைவிட றமலா, பெத்தலகேம் மற்றும் குவாலியா நகரங்களும் இஸ்ரேலால் பலஸ்தீனர்களிடம் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளன.

கடந்தமாதம் எகிப்தில் இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன தலைவர்களிடையே நடந்த உயர்மட்ட சந்திப்பில்– தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பலஸ்தீனர்களின் 05 நகரங்களை அவர்களிடம் ஒப்படைக்க இஸ்ரேல் உறுதியளித்தபோதிலும், இந்தச் சந்திப்பிற்குப் பின்னர் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து இது தாமதமானது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பலஸ்தீன அதிகாரசபை பலஸ்தீனத்தின் கிளர்ச்சிவாதிகள் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி கிளர்ச்சிவாதிகள் தனியொரு துப்பாக்கியையே வைத்திருக்கலாம். ஆனால் அவற்றைக் கொண்டு திரியவோ அல்லது பொது இடங்களில் வைத்து அவற்றுக்கு குண்டுகளை நிரப்பவோ முடியாது. அத்துடன் சகல ஆயுதங்களும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

ஆனாலும் மேற்குக்கரைப் பகுதி நகரங்களிலிருந்து இஸ்ரேல் ராணுவம் முற்றாக பின்வாங்கிச்செல்லும் வரை, இந்த சட்டதிட்டங்களுக்கு தம்மால் கட்டுப்படமுடியாதென கிளர்ச்சிவாதக் குழுக்கள் தெரிவித்துள்ளன.


**LONDON LANGUAGE SCHOOL**

**"THE SCHOOL WITH GOLDEN TOUCH"**

ஆங்கில அடிப்படை அறிவே இல்லாத (அரிச்சுவடி அறிவே இல்லாத) அனைவருக்கும் ஆங்கிலத்தை இலகுவில் கற்றுக் கொள்ளக்கூடிய வீதமான இலகு ஆங்கிலக் கற்கை நெறி.

- பிரிவு III ஆரம்பம்
  காலம் : 3 மாதம்
- ENGLISH FOR COMMUNICATION
  காலம் : 3 மாதம்

இலவச ஆலோசனையும் புதிய பிரிவுகளுக்கான பதிவுகளும் 26.03.2005 காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை

தொடர்பு:

**LONDON LANGUAGE SCHOOL,**
**PACIFIC NET COMPUTERS,**
**1, Brown Road, Jaffna.**

0777 222300, 077-6176383, 021-2226413, 0777-763781

(C/3927)





### பயிற்சி உதவியாளர்

திறன் அபிவிருத்தி தொழில்சார் கல்வி அமைச்சின் கீழ் தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் கீழ்க்காணும் பயிற்சி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

கல்வி சார்ந்த துறையில் கணினி, ஆங்கிலம், கணக்கியல், வர்த்தகம், குடிசார் எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், மின்னியல்,எந்திரவியல் போன்ற வெற்றிடங்களுக்கு திட்ட ஒதுக்கீடு தாபன செயற்பாடுகள், செய்நிரலாக்கம், பராமரிப்பு முகாமைத்துவ தகவல் முறைமை ஆராய்ச்சி, மதிப்பீடு, உள்ளக கணக்காய்வு ஊடகம், தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும், நூலக அபிவிருத்தி போன்ற வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக விண்ணப்பிக்கும் துறை சார்ந்த பட்டம்ஒன்றை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தின் தபால் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படுவதுடன் 2005.04.06 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம், த.பெ.எண் 557, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

### அபிவிருத்தி உதவியாளர்

சுற்றுலாத்துறை அமைச்சில் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழ்க்காணும் தகுதிகொண்ட விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொருளியல், சமூகவியல், வியாபார முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம், சட்டம், கணக்கியல், சுற்றுலா, விருந்தோம்புகை முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பட்டம் பெற்று இருத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படுவதுடன் பதிவுத் தபாலில் 2005.04.07 திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு மேலதிக செயலாளர் (நிர்வாகமும் நிதியும்) கல்வி அமைச்சு இசுருபாய, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

### கல்வி அமைச்சில்

கல்வி அமைச்சில் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்காக உரிய தகைமை கொண்ட விண்ணப்பதாரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அபிவிருத்தி உதவியாளர், திட்டமிடல் நிதி உதவியாளர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்புகள் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படும். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் 'அபிவிருத்தி உதவியாளருக்கான பதவிக்கு ஆட்சேர்ப்பு' என குறிப்பிட்டு 2005.04.05 திகதியன்றோ, அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சு, இல 64, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

### சுதேச வைத்திய அமைச்சில்

சுதேச வைத்திய அமைச்சின் கீழ், கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூலிகை விவசாய செயற்திட்டத்துக்கான செயற்திட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி (வெற்றிட எண்ணிக்கை 5) சுதேச வைத்திய அமைச்சுக்கான புள்ளிவிபரவியல் உதவியாளர் பதவி (வெற்றிட எண்ணிக்கை 1) ஹோமியோபதி வைத்தியசாலைக்கான வைத்தியசாலை முகாமைத்துவ உதவியாளர் பதவி (வெற்றிட எண்ணிக்கை 1) அபிவிருத்தி உதவியாளர் பதவி (வெற்றிடஎண்ணிக்கை 10) விவசாய அபிவிருத்தி உதவியாளர் பதவி (வெற்றிட எண்ணிக்கை 20) ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமைகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் ஒன்றைப் பெற்றிருப்பதுடன், தெரிவுசெய்யும் வைத்தியர்களுக்கு அமைய பட்டத்தில் ஒரு பாடமாக கற்று இருத்தல் வேண்டும். வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டுமே பயன்படுத்த முடியும் ஏன்பதால், ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு -

2005.04.05 அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு சுதேச வைத்திய அமைச்சு இல 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.


## பணிநிலைக்கான வேண்டுகை

அக்கராயன் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஆண்களுக்கான சந்தோசம் உளவளத்துணை நிலையத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன் வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகை கல்விச்சான்றிகழ்கள் பிறப்புச் சான்றிதழ், வதிவிட சான்றிதழ் ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்விற்கு நேரில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### பணிநிலைகள்

01. நிர்வாக உத்தியோகத்தர்.
02. கணக்காளர்.
03. சுத்திகரிப்பாளர்.
04. பராமரிப்பாளர்.
05. சமையலாளர்.
06. வெளிக்கள அலுவலர்.

### கல்வித்தகமைகள்

**பணிநிலை 1** :- க.பொ.த (உ/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை 2** :- க.பொ.த (உ/த) வணிகப் பிரிவில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**பணிநிலை 3** :- ஆண்டு 8 கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை 4** :- ஆண்டு 10 கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை 5** :- சமையல் வேலையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை செய்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை 6** :- க.பொ.த (சா/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 02 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :-**
28.03.2005 திங்கட்கிழமை காலை 11 மணி
**இடம் :-** தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
நடுவப்பணியகம் (கந்தசாமி கோவில் அருகாமை)
கிளிநொச்சி.

ஆளணி நிர்வாகப்பகுதி,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப் பணியகம்,
கிளிநொச்சி.

(சி-3929)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மருத்துவபீட பிரச்சினையைத் தீர்க்க 27ஆம் திகதி வரைக்கும் காலக்கெடு!

## மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது கல்விச் செயற்பாட்டிற்குரிய பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்படாத விடத்து, அன்றிலிருந்து துணைவேந்தரை பல்கலைக்கழகத்திற்குள் நுழையவிடாமல் தடுக்கப் போவதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

தமது இந்தப் பிரச்சினை தொடர்பாக நேற்று மாலை 5.30 மணியிலிருந்து இரவு 7.30 மணிவரை பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் மருத்துவபீடத்தில் நடத்திய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளதாவது -

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் எமதுகல்விச் செயற்பாட்டுக்குரிய பிரச்சினைக்கு துணைவேந்தர் நிரந்திரத்தீர்வொன்றைக் காண வேண்டும். இல்லையெனின் 27 ஆம் திகதியிலிருந்து துணைவேந்தர் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு மருத்துவபீட மாணவர்கள் அனுமதியளிக்க மாட்டார்கள்.

மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மருத்துவ பீடத்திற்கு அழைத்து, அவர்களுக்கு எமது பிரச்சினைகளை தெளிவுபடுத்தி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்களுடன் எமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி, அவர்களுடனும் இணைந்து எமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன், எமது பிரச்சினை தற்போது பாரியளவில் எழுந்துள்ள வேளையில், மருத்துவபீடாதிபதி தனது பதவிவிலகல் கடிதத்தை துணைவேந்தரிடம் சமர்ப்பித்துள்ளார். ஆனால், எமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்ட பின்னர் இதே மருத்துவ பீடாதிபதி தொடர்ந்தும் இருப்பாரேயானால் அதனை நாம் அனுமதிக்க மாட்டோம்.

எனவே, மருத்துவ பீடாதிபதி தனது பதவி விலகல் கடிதத்தை தற்போதே வாபஸ் பெறவேண்டும். இதனை துணைவேந்தர் தெளிவுபடுத்த வேண்டும்.

எமது போராட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்த ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதுடன், மற்றைய பீடமாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்காமல் இருக்கும் வகையில் மருத்துவப்பீட மாணவர்களை தமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## முஸ்லிம் வர்த்தகர் துப்பாக்கிச் சூட்டில் பலி

மட்டக்களப்பு - ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நகைக்கடைவர்த்தகரான சேகு லெப்பை ராசீக் (வயது -48) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

இவரது வீட்டிற்கு வந்த மூன்று ஆயுதபாணிகள் பெயர் குறிப்பிட்டு அழைத்தவாறு உள்ளே சென்று சாப்பிட்டுக்கொண்டிருந்த வர்த்தகர் மீது நெஞ்சிலும் வயிற்றிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத போதிலும் அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் ஆயுதபாணிகளாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமென அப்பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஓட்டமாவடியிலுள்ள மற்றுமொரு நகைக்கடையிலும் இப்படியானதோர் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் இடம்பெற்று ஒருவர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இருதய சிகிச்சை நிபுணரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

(கொழும்பு)

அமைச்சர் ரோகித போகொல்லாகமவின் மனைவி தீப்தி போகொல்லாகமவை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணரான எஸ்.நரேந்திரனை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மே 6ஆம் திகதியன்று நீதிமன்ற விசாரணைக்கு வரவேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இருதய சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.நரேந்திரனைக் கொலை செய்ய முயன்றதாக தீப்தி போகொல்லாகம மீது நரேந்திரனும், தன்னைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க நரேந்திரன் முயற்சித்தார் என்று தீப்தியும் பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

முன்னைய விசாரணையின் போது நரேந்திரன்மீது வழக்குத் தொடர வேண்டாமென்று சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும், பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர். இதையடுத்து அந்தக் குற்றச்சாட்டிலிருந்து வைத்தியர் நரேந்திரன் விடுவிக்கப்பட்டார்.

இதை எதிர்த்து மேன்முறையீட்டை தீப்தி போகொல்லாகம செய்தார். இதையடுத்தே நரேந்திரனுக்கு இந்த உத்தரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கட்டமைப்பு முயற்சி...

நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படும். உதவி பகிர்ந்தளிக்கும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் போர்நிறுத்த உடன்படிக்கை மூலம் விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான நிலையை வழங்குவதற்கான ஆரம்பமாகும்.

சர்வதேச சமூகம் தற்போதைய அரசினூடாக விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச கடனுதவிகளை சட்டரீதியாக பெற்றுக்கொடுக்க முயற்சித்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு தேவை இருப்பின் அவற்றுக்கு எந்தவிதமான தடையுமில்லை.

ஒருங்கிணைந்த பொதுக்கட்டமைப்பை அமைக்கும் செயற்பாடானது மக்களுக்கு தகவல்களை மறைக்க செய்யும் வகையிலானது. இது பாரிய குற்றச்செயலாகும். இதனால் இந்த கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் அறிக்கைகளை அரசாங்கம் உடனடியாகவே வெளியிடவேண்டும்.

## சண்டே லீடரின் செய்திக்கு...

ழான சண்டே லீடரில், டி.பி.எஸ். ஜெயராஜ் தனது கட்டுரையில் -

பிரிட்டன் புலனாய்வுத் துறையினர், தேனீர் விருந்தொன்றுக்கு பாலசிங்கத்தை அழைத்த பின்னர், அங்குவைத்து, இலங்கையின் வட பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயதேவனை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமெனவும், இல்லையெனில் தற்போதைய சுமுகமான நிலை தொடர்ந்திருக்காதெனவும் தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

இவரது இந்தக் கட்டுரை தொடர்பாக நேற்று தமிழ்நெற் இணையத்தளத்துக்கு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜெயராஜின் இந்தக் கட்டுரை கெட்ட நோக்கத்தைக் கொண்டதாகும். ஜெயதேவனின் நடவடிக்கை தொடர்பாக இலங்கையிலோ அல்லது வேறெங்கிலுமோ பிரிட்டன் அதிகாரிகள் என்னுடன் தொடர்புகொள்ளவில்லை.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுபவன் என்ற வகையில் நான் பிரிட்டன் அதிகாரிகளுடன் தொடர்பினை மேற்கொண்ட போதும், அவர்கள் ஜெயதேவன் தொடர்பாக என்னிடம் எவ்வித தகவல்களையும் தெரிவிக்கவில்லை.

சண்டே லீடரின் ஆசிரியர் அண்மையில் நீண்ட நேர்காணலொன்றை என்னிடம் எடுத்திருந்தார். அந்த விபரங்களை அவர்கள் வைத்துள்ளனர். ஆனால், ஜெயதேவன் தொடர்பான விடயம் குறித்த செய்தியைப் பிரசுரிப்பதற்கு முன்னர் அவர்கள் என்னிடம் தொடர்புகொள்ளாமையையிட்டு நான் ஆச்சரியமும் அதிருப்தியும் அடைகின்றேன்.

1999 ஆம் ஆண்டு எனது உடல் நிலையைக் கருத்திற் கொண்டு நான் வன்னியிலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற நாள் முதல் பிரிட்டனே எனது இல்லம். நான் பிரிட்டன் அதிகாரிகளுடன் நல்லுறவினையே பேணி வருகின்றேன் எனத் தெரிவித்தார்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 98.94 | 99.88 |
| ஸ்ரேலிங் பவுண் | 187.25 | 189.96 |
| யூரோ | 129.80 | 132.03 |
| சுவிஸ் பிராங் | 83.38 | 85.38 |
| யென் | 0.9372 | 0.9553 |

## பேச்சுக்களை முன் நகர்த்த...

சியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நோர்வே முன்வைத்த திட்டத்தை விடுதலைப் புலிகள் முழுமையாக ஏற்றுள்ளனர். போர்நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் பூரணமாக கடைப்பிடித்து வருகின்றனர்.

அத்துடன் இந்த உடன்படிக்கையின் பின்னர் பொது இடங்களிலிருந்த புலிகளின் சகல இராணுவ கட்டமைப்புக்களும் அகற்றப்பட்டுள்ளன. ஆனால் யாழ்.குடாநாட்டில் இராணுவம் பொதுமக்களின் குடியிருப்புக்களில் உயர்பாதுகாப்பு வலயங்களை அமைத்து மக்களின் மீள் குடியேற்றத்துக்கு தடையாகவுள்ளது.

இவற்றைவிட போர்நிறுத்த உடன்படிக்கையின் 1.8 சரத்தை அரசாங்கம் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. சுனாமியால் பாதித்தவர்களுக்கு உதவவும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போராளிகள் மீதும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டதால் பல போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தின் வெளியுறவு அமைச்சு அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் திட்ட அலுவலர் இவான் கயூரி, பொறிஸ் நிச்சா[illegible] சிடோறியா கபிரியேல் ஆகியோ[illegible] கலந்துகொண்டனர்.

## ஹெயிட்டியிலிருந்து படை...

நாட்டைப் பாதுகாக்கப் பயிற்றப்பட்ட படையினர், கூலியாட்களாகப் பயன்படுத்தப்படுவதாகவும் ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கையில் பிரிவினைவாத நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் சூழலில் இன்னொரு நாட்டில் போராட்டத்தை நசுக்க இலங்கைப் படையினரை அனுப்புவது உகந்த தீர்மானமல்ல என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

எனினும், ஹெயிட்டியிலிருந்து இலங்கைப் படைகள் மீளத் திருப்பி அழைக்கப்படமாட்டாது என்று ஹெயிட்டியில் நிலைகொண்டிருக்கும் இலங்கைப் படையினருக்கான கட்டளை அதிகாரி கேணல் அமல் கருணாசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஞாயிறன்று ஹெயிட்டியில் உயிரிழந்த இலங்கைப் படைவீரரின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடாக 50 ஆயிரம் அமெரிக் டொலரை ஐ.நா. வழங்கும்.

உயிரிழந்த சிப்பாயின் சடலம் 3 வார காலத்துக்குள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த லான்ஸ் கோப்ரல் விஜேசிங்கவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

## கசியவிட்ட...

துள்ளமையானது இவர்களின் செயற்பாட்டுக்கு படையினரும் அரசாங்கமும் பக்கபலமாக இருப்பதனையே தெளிவாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு படைகள் அனுப்பப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது எதிர்காலத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மீது இவ்வாறான தாக்குதல் நடைபெறுவதனை தடுப்பதற்கான நடவடிக்கையென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ரணில் இந்தியா...

லர் சியாம் சரன் ஆகியோரைச் சந்திக்கமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் ரணிலின் விஜயத்தின்போது இவர்கள் புதுடெல்கியில் இருக்கமாட்டார்கள் என்பதாலேயே இவர்களுடனான சந்திப்பு நடைபெறமாட்டாதென ரணிலின் உதவியாளர்கள் தெரிவித்தனர்.

## நடிகர் ஜெமினி....

கடந்த சில தினங்களுக்கு முன்னரேயே அவர் குணமடைந்து நுங்கம்பாக்கத்திலுள்ள தனது வீட்டிற்கு திரும்பினார்.

கல்லூரி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய ஜெமினி கணேசன் 1947 ஆம் ஆண்டு சினிமாவில் நடிக்கத் தொடங்கி தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் 200ற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். மறைந்த எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன் இருவரும் கொடிகட்டிப் பறந்த காலத்திலும் ஜெமினி கணேசன் தனக்கென தனியிடத்தைப் பெற்று ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றிருந்தார்.

ஜெமினி கணேசனுக்கு ஹிந்தி நடிகை ரேகா உட்பட 7 பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ளனர். மரணமான ஜெமினியின் உடலுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா, கருணாநிதி மற்றும் முன்னாள், இந்நாள் நடிகர்கள் உட்பட பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை 5 மணியளவில் பெசன்ட் நகரிலுள்ள மயானத்தில் ஜெமினியின் உடல் தீயுடன் சங்கமமானது.


## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அன்புடையீர்,

23.02.2005 புதன்கிழமை மாலை 5 மணியளவில் சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய தந்தையார்

**உயர்திரு வே.க.ஏரம்பு**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 23.03.2005 காலை 7.00 மணிக்கும் வீட்டுக் கிருத்தியம் 25.03.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் தூயவன் அரசறிவியல் கல்லூரியிலும் நடைபெறும்.

அவ்வமையம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து எமது தந்தையின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிற் கலந்து அமுதருந்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு தாழ்மையுடன் அன்புள்ளங்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி-3930)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

# அளவையியலும் விஞ்ஞான முறையும் (பகுதி I)

ஆசிரியர் P.கமல் B.A
யாழ். இந்து மகளிர் கல்லூரி

மூன்று மணித்தியாலம்

**பகுதி I பகுதி II பகுதி III ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01) அ. பின்வரும் எடுப்பு முரண்பாட்டுத் தொடர்புகள் சரியானதா, தவறானதா எனக் கூறுக?

1) எந்த ஒரு முறையியலாளரும் மெய்யியலாளர் எனின் சில முறையியலாளர் மெய்யியலாளர் அல்ல என்பதைப் பெறமுடியாது.
2) முறையியலாளர் மெய்யியலாளர் அல்ல எனின் முறையியலாளர் சிலர் மெய்யியலாளர் அல்ல.
3) ஒவ்வொரு முறையியலாளரும் மெய்யியலாளர் அல்ல என்பதன் பொய்ப்பித்தலில் இருந்து சில முறையியலாளர் மெய்யியலாளர் ஆவர் என்பதை உறுதி செய்ய முடியாது.
4) பெரும்பாலான முறையியலாளர் மெய்யியலாளர் அல்ல என்பது உறுதி எனின் சில முறையியலாளர் மெய்யியலாளர் ஆவர் என்பது பொய்.
5) அநேகமான மெய்யியலாளர் முறையியலாளர் என்பது உண்மை எனின் ஒவ்வொரு முறையியலாளரும் மெய்யியலாளர் அல்ல என்பது பொய்.

ஆ. பின்வருவனவற்றை உதாரணத்துடன் விளக்குக.

1) இருத்தல் போலி
2) எடுப்பு முரண்பாடு பற்றிய தற்காலிக விளக்கம்.

2) அ.

1) O எடுப்பு ஒன்றுக்கு ஏன் மறுமாற்ற எதிர்மாற்றம் செய்ய முடியாது என்பதை எதிர்மாற்ற விதிகளைக் கொண்டு விளக்குக?
2) A எடுப்புக்கான மறுமாற்ற எதிர் வைப்புக்கு உதாரணம் தருக?
3) மறுமாற்றம் ஒன்று பெற்றிருக்க வேண்டிய அடிப்படை விதிகளைக் கூறுக?

ஆ. பின்வரும் உடன் அனுமானம் வலிதானதா, வலிதற்றதா என்பதனை விளக்குக.

1) சில மந்திரவாதிகள் மாந்தீரிகமானவர் எனின் சில மந்திரவாதிகள் மாந்தீரீகமற்றவர்கள் அல்ல.
2) எல்லாப் பசுக்களும் முலையூட்டிகள் ஆகும் எனின் சில பசுக்கள் அல்லாதன முலையூட்டிகள் அல்லாதன.
3) எந்த ஒரு பறவையும் பறப்பன அல்ல எனின் எந்தப் பறவை அல்லாதனவும் பறப்பன ஆகும்.
4) ஒரு சில காகங்கள் கருமையானவை ஆகும். ஏனெனில் காகங்கள் கருமையானவை அல்ல.
5) பெருமளவான மருந்துகள் தீப்பற்றக் கூடியவை எனின் தீப்பற்றக் கூடியவை சில மருந்துகள் ஆகும்.

3) அ. எடுகூற்று ஒன்று குறை எடுப்பு எனின் முடிவும் குறை எடுப்பாக காணப்பட்டால் வலிதான முடிவைப் பெறலாம். விளக்குக.

ஆ. உரு II இற்குரிய வலிதான் பிரகாரங்களை உதாரணத்துடன் காட்டுக?

இ. பின்வரும் வாதங்களை நியாயத் தொடை முறையில் ஒருங்கமைத்து அவற்றினை பிரதான விதிகள் மூலம் துணிந்து வலிதானதா வலிதற்றதாஎன்பதைக்காட்டுக? வலிதற்றதாயின் மீறப்பட்ட விதி அல்லது விதிகளைக் கூறுக?

1) புதியவரிகள் பழையவரிகள் போல் நன்மையானவை அல்ல எனின் பழைய வரிகள் புதிய வரிகள் அல்ல.
2) நாடுகள் மட்டும் அபிவிருத்தி அடைந்தவை ஏனென்றால் அபிவிருத்தி அடைந்தமை மட்டும் வல்லரசு என்பதுடன் வல்லரசு எல்லாம் நாடுகள் ஆகும்.
3) பிரம்மச்சாரிகள் திருமணமானவர்கள் ஆவர் ஏனெனில்ஆசிரியர்கள் திருமணமாகாதவர்கள் என்பதுடன் ஆசிரியர்கள் பிரமச்சாரிகள் ஆவர்.
4) சில கிளிகள் பறப்பவை எல்லாக் கிளிகளும் பறப்பனவாக இருக்கும் போது சில கிளிகள் பறவைகள் அல்ல என்பதனால் ஆகும்.

4) அ. பின்வரும் வாதங்களைச் சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதனை வென்வரைபடத்தின் மூலம் துணிக.

1) ஜோர்ஜ் புஷ்ஷும் மனைவியும் இந்தியா சென்றனர் இந்தியா சென்ற சிலர் திருமணம் செய்தனர் எனவே ஜோர்ஜ் புஷ்ஷும் மனைவியும் திருமணம் செய்தார்.
2) அடாவடித்தனம் எதுவும் வெற்றியைத் தராது இலங்கையுத்தமும் ஈராக் யுத்தமும் வெற்றியைத் தராது. எனவே இலங்கை யுத்தம் அடாவடித்தனம் ஆகும்.
3) எல்லா ஜீவராசிகளும் பகுத்தறிவுடையவை ஏனெனில் சில ஜீவராசிகள் நேர்மையானவை என்பதுடன் பகுத்தறிவுடையவை நேர்மையானவை என்பதால்.
4) எல்லா பிரம்மச்சாரிகளும் கொலைகாரர்கள் எனின் சங்கராச்சாரியர் கொலைகாரர் அல்ல என்பதிலிருந்து சங்கராச்சாரியர் பிரமச்சாரி அல்ல என்பதைப் பெறலாம்.

ஆ. பின்வரும் வாதங்களில் உள்ள எடுகூற்றுக்களுக்கு வென்வரைபடத்தினை வரைந்து வலிதானது எனின் முடிவைப் பெறுக. வலிதற்றது எனின் முடிவைப் பெற முடியாது எனக் காட்டுக.

1) எல்லா M ம் P ஆகும்.
சில S ம் M அல்ல.
2) எல்லா P ம் M அல்ல.
சில M ம் S ஆகும்.
3) எல்லா P ம் M ஆகும்.
சில M ம் S ஆகும்.
4) எல்லா M ம் P அல்ல.
சில S ம் M ஆகும்.

## பகுதி II

5) அ. வாதம் ஒன்றின் அளவையியல் வடிவம் என்றால் என்ன? வலிதான வாதத்திற்கும் வலிதற்ற வாதத்திற்கும் உதாரணம் தந்து விளக்குக?

ஆ. அவன் வீடு செல்கிறான் என்ற வாக்கியம் உண்மை என்று தரப்பட்டால் கீழ் வரும் வாக்கியங்கள் உண்மையோ பொய்யோ அல்லது தீர்மானிக்க முடியாதோ என்பதைத் துணிக. உமது பதிலை முடிந்தவரை சுருக்கமாக விளக்குக. வாக்கியத்தை குறியீடாக்கலாம் ஆனால் உண்மை அட்டவணையைப் பயன்படுத்தக் கூடாது.

1) அவன் வீட்டிற்குச் செல்லாவிட்டால் அவன் கொழும்பு செல்வான்.
அவன் நண்பர்களை சந்திப்பானாயின் அவன் மகிழ்வான்
2) அவன் வீட்டிற்குச் சென்றால் ஆயினே அவன் கொழும்புக்குச் செல்வான் எனத் தரப்பட்டால்ஆயினே ஒன்றில் அவன் வீட்டுக்குச் செல்வான் அல்லது அவன்பாடசாலைக்கு செல்வான்.

இ. இனியவன் இன்று இருவரில் ஒருவர் மட்டும் கனடா செல்வர் எனின் ஒன்றில் இனிவனோ அல்லது இன்பனோ கனடாசெல்லவில்லை என்பதற்குத் தர்க்க வடிவில் இரு குறியீடுகள் தருக?

ஈ) பின்வருவன சமனானதா முரணானதா அல்லது சமனும் அல்ல முரணும் அல்ல என்பதனை உண்மை அட்டவணையின் நேர்முறைமூலம் காட்டுக.

1. $[P \vee (Q \wedge p)], \sim (P \leftrightarrow Q)$
2. $[\sim (P \vee Q) \wedge (R \wedge P)], - [P \rightarrow (Q \rightarrow R)]$
2. $[\sim (P \wedge Q) \rightarrow \sim R], [(\sim P \vee Q) \rightarrow \sim R)]$

6) அ. பின்வரும் வாதங்களைச் சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து உண்மை அட்டவணையின் படி பிரச்சினையைத் தீர்க்க.

1. தேர்தல் காலங்களில் கருத்துக் கணிப்பு தொடர்பாக A, B, C மூன்று ஆய்வாளர் அது பற்றித் தமது கருத்துக்களினைப் பின்வருமாறு கூறினர்.
A – கஜா தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழர் அழிவடைவர்.
B – சிங்கம் தேர்தலில் வெற்றி பெறான் அல்லது தமிழர் துக்கமடையமாட்டர்.
C – கஜா தேர்தலில் வெற்றி பெற்றால் ஒன்றில் தமிழர் அழிவடைவர் அல்லது நாட்டில் இனவாதம் தோன்றும்.

இம் மூவருள் A யின் கருத்து பொய் எனவும் ஏனைய இருவரின் கருத்து உண்மை எனக் கொண்டால் சிங்கம் தேர்தலில் வெற்றி பெறுதல் என்பது தர்க்கரீதியாக சரியானதா தவறானதா.

2) மக்கள் ஆவேசம் அடைவர் எனின் கொழும்பு செல்வர் என்பதால் மக்கள் ஆவேசம் அடையவில்லை என்பதை தர்க்கரீதியாகப் பெறலாமா?

ஆ. பின்வரும் வாதங்களைச் சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு , குறியீடு செய்து உண்மை அட்டவணையின் நேரல் முறை மூலம் துணிக.

I) புகையிரதக் கட்டணம் அதிகரிக்குமாயின் போக்குவரத்துத் துறை வருமானம் அதிகரிக்கும். போக்குவரத்து துறை வருமானமோ சுற்றுலாத்துறை வருமானமோ அதிகரிக்கவில்லை ஆகவே புகையிரதக் கட்டணமோ சீரழிவுகளோ அதிகரிக்கவில்லை.

II) தலைவர்கள் நியாயமானவர்கள் அல்லது யுத்தத் துறையில் சம பலமுள்ளது எனத் தரப்பட்டால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் செயலற்று உள்ளதாயின் மட்டுமே மூன்றாம் உலகயுத்தத்தை தவிர்க்க முடியும் எனவே ஒன்றிப்புத் தலைவர்கள் நியாயமானவர் அல்ல. அல்லது மூன்றாம் உலக யுத்தத்தை தவிர்க்க முடியாது.

7) பின்வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து அவை வலிதானதா அல்லது வலிதற்றதா என்பதனை எடுகூற்றில் இருந்து முடிவைப் பெறுவதன் மூலம் காட்டுக.

1) சந்தோசமும் துக்கமும் ஏற்படாவிட்டால் வாழ்க்கை முடிந்து விடும் இதன் பொருள் என்னவெனில் ஒன்றில் சந்தோசம் ஏற்படாவிட்டால் வாழ்க்கை முடிந்துவிடும் அல்லது துக்கம் ஏற்படாவிட்டால் வாழ்க்கை முடிந்துவிடும்.
2) சனத்தும் முரளியும் துடுப்பாட்ட வீரர் அல்ல என்பதுடன் சனத் துடுப்பாட்ட வீரர் என்பதனால் முரளி ஒரு துடுப்பாட்ட வீரர் இல்லை என்பது பெறப்படும்.
3) மனிதர் பூமியில் வாழ்ந்தால் அல்லது செவ்வாயில் வாழ்ந்தால் அவர்கள் விஞ்ஞானிகளாகவும் தொழில்நுட்பவியலாளராகவும் வாழ்வார்கள் மனிதர்கள் விஞ்ஞானிகளாக வாழ்ந்தால் அவர்கள் பூமியில் வாழும் போது மிருகமாகவும் வாழ்கின்றனர் ஆகவே மனிதர் செவ்வாயில் வாழ்கின்றனர்.
4) கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரிக்குமாயின் ஒன்றில் தொலைபேசி பாவனை குறையும் சீரழிவுகள் ஏற்படும் தொலைபேசி பாவனை குறையும் எனின் வருமானம் குறையும் சீரழிவுகள் ஏற்படுமாயின் இலங்கை பாதிப்படையும் ஆகவே கையடக்கத் தொலைபேசிப் பவனை அதிகரிக்கும் எனின் ஒன்றில் சீரழிவுகள் ஏற்படும் அல்லது இலங்கை பாதிப்படையும்.

8) அ. தேற்றம் என்றால் என்ன விளக்கித் தேற்றத்தின் பயன்பாடுகளைத் தருக.
ஆ. பின்வரும் தேற்றங்களைப் பெறுகை முறையில் நிறுவிக் காட்டுக.

1. $[(\sim Q \wedge p)] \rightarrow \sim (Q \leftrightarrow P)]$
2. $[(Q \vee P) \leftrightarrow (P \vee Q)]$
3. $[(P \rightarrow Q) \leftrightarrow \sim (PA \sim Q)]$
4. $[(P \rightarrow Q) \rightarrow (R \rightarrow S)] \rightarrow [(P \rightarrow Q) \rightarrow (R \rightarrow S)]$

## பகுதிIII

9) பின்வரும் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு தருக?

1) பரார்தனுமானம் 2) எளிய கூற்றுக்களும், கூட்டுவாக்கியமும் 3) சிந்தனை விதிகள் 4) நியாயத் தொடையின் குறைபாடுகள் 5) நியாயமாலை

10) பின்வரும் நியமமில் போலிகளை இனங்கண்டு விளக்குக.

1) இங்குள்ள ஒரு அரசியல் வாதி சென்ற வருடம் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கைக்காக வாதிட்டார் இவருடம் சுதந்திரக்கூட்டமைப்புக்காக வாதிடுகிறார் எனவே இவர் கூறும் நியாயங்களை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.
2) அமெரிக்கரில் பெரும்பாலானோர் தீவிரவாதக் கருத்துக்கு எதிரானவர் என்பதால் அமெரிக்காவின் ஜனாதிபதி அவ்வாறு காணப்படுகிறார்.
3) இலங்கையில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தால் அதற்கு உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக்கா அறிக்கையொன்றை வெளியிட்டது. சுனாமியில் பாதித்த பிரதேசங்களில் யுத்தம் செய்யும் இரு பகுதியும் அர்ப்பணிப்புடன் செயல்படுங்கள். இல்லையேல் ஈராக்கின் பிரதேசங்கள் எவ்வாறான நிலையில் உள்ளது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
4) ஜெயசூரியா கிரிக்கெட் மட்டையையோ பந்தையோ வைத்திருந்ததை எவரும் எச்சந்தர்ப்பத்திலும் காணவில்லை என்பதால் ஜெயசூரியா கிரிக்கெட் வீரர் அல்ல.

11) அ) பின்வருவன சரியானதா, பிழையானதா என்பதை வெளிப்படுத்துக.

1) அளவையியலும், கேத்திர கணிதமும் நியம விஞ்ஞானம் அல்ல.
2) $(P \rightarrow \sim P)$ என்பது சில வேளைகளில் பொய் அல்ல.
3) வாய்ப்பற்ற வாதம் அனைத்தும் பொய்யான முடிவுகளை உடையன.
4) பங்காளி என்பது கடந்தேகு தொடர்பு ஆகும்.
5) ஓர் எடுப்பின் எழுவாய் அல்லது பயனிலை அல்லது இணைக்கும் சொல் பதம் எனப்படும்.

ஆ) 1) கடவுளை வரவிலக்கப்படுத்த முடியாது விளக்குக?
2) ஜி . மூவர் என்பவரின் ஒழுக்கவியல் இயற்கைப் போலி பற்றி விளக்குக.

12) பின்வருவனவற்றில் எவையேனும் ஐந்து பற்றி விளக்குக?

1) காட்சி 2) சதுஸ்கோடி 3) இந்திய அளவை முறை
4) ஹேத்துபாச 5) இயற்கை மொழி, குறியீட்டுமொழி 6) உபநிடத

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

## அளவையியலும் விஞ்ஞான முறையும் (பகுதி II)

ஆசிரியர் P.கமல் B.A
யாழ். இந்து மகளிர் கல்லூரி

மூன்று மணித்தியாலம்

பகுதி I, II, III ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தேர்ந்தெடுத்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி - I

01) அ) கீழே தரப்பட்டவற்றில் எவற்றுக்கு பொய்ப்பித்தல் கோட்பாடு பொருந்தாது என்பதை முதலில் கூறி ஏனையவற்றுள் எவை விஞ்ஞானம், எவை விஞ்ஞானம் அல்லாதன எனக் கூறுக.

புவியீர்ப்புக் கொள்கை, விதித்து விதித்தல் விதி, பௌதீகம், பௌதீக அதீதம், பொருளியல், பூகம்பவியல், வரலாறு, 3x2=6 கேள்வி விதி, பெருவெடிப்புக் கொள்கை

ஆ) பிரயோக விஞ்ஞானம் எவ்வாறு தூய விஞ்ஞானத்தில் தங்கியிருக்கிறது என்பதை உதாரணம் மூலம் காட்டுக.

இ) புலமைவாதிகள் எட்டுக்கால் பூச்சியைப் போன்றவர்கள், கைவினையாளர்கள் எறும்புகளைப் போன்றவர்கள், தேனீயைப் போல செயற்படும் போது தான் அறிவு வளருகிறது. பிரான்ஸிஸ் பேக்கினின் இந்த நோக்கினை விளக்குக.

ஈ) அழகியல் ஒரு பெறுமான விஞ்ஞானம் ஆயினும், விஞ்ஞானம் பற்றிய பொதுவான கருத்தில் அது ஒரு விஞ்ஞானம் அல்ல விளக்குக.

02) அ) காரண காரிய விளக்கத்திற்கு எதிரான தத்துவங்களை விளக்குக.

ஆ) பின்வரும் பரிசோதனை முறைகள் யாதெனக் கூறுக.

1. மெலோன் என்பவர் சில எடுத்துக் காட்டுக்களை முன்வைத்து அதற்குரிய தோற்றப்பாடுகளையும் விளக்கியபின், இறுதியாக மீதமாக உள்ள விளைவிற்குப் புதிதாக ஒரு காரணத்தைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும் எனக் கூறினார்.
2. ஒரு மணிச்சாடியில் உள்ள காற்றின் அளவை எவ்வளவு அளவில் கூட்டிக் குறைக்கிறோமோ, அவ்வளவு அளவில் மணிச் சத்தமும் கூடிக்குறையும் எனின், மணிச்சத்தம் கூடிக் குறைவதற்குக் காரணம் காற்று கூடிக் குறைவதே ஆகும்.
3. அயன் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்ட பல மலரினத் தொகுதியில் வண்டுகளும் தேனீக்களும் உட்கொள்கின்றன. அயன் மகரந்தச் சேர்க்கை ஏற்படாத பல மலரனத் தொகுதியில் வண்டுகளும், தேனீக்களும் உட்கொள்ளவில்லை. எனவே, அயன் மகரந்தச் சோக்கை ஏற்படுவதற்கு வண்டுகளும், தேனீக்களும் காரணமாகும்.

இ) விஞ்ஞானத்தில்
1. விளக்கம்
2. எதிர்வுகூறல் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு யாது? *(3 புள்ளிகள்)*

ஈ) விஞ்ஞானக் கோட்பாட்டினை வளர்ப்பதில் காட்டுரு, ஒப்புமை ஆகியவற்றின் பங்கினைத் தருக.

03) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறு குறிப்புத் தருக.
1. இலட்சிய பரிசோதனை
2. வகையீடு பிரிப்பு
3. பூரண பூரணமற்ற தொகுத்தறிவு
4. கலிலியோவும் தொலைகாட்டியும்

ஆ) விஞ்ஞான விளக்கமாக பல்வேறு விளக்க வகைகள் காணப்பட்டாலும் தர்க்க ரீதியான விளக்கம் வாயிலாகவே விஞ்ஞானம் முழுமை பெறுகிறது. காள் கெம்பலின் இச் செயற்பாட்டை உதாரணம் மூலம் விளக்குக.

04) அ) I) நிகழ்வின் நிகழ்தகவு என்றால் என்ன என்பதனை விளக்குக.
II) பின்வருவனவற்றை விளக்குக.
1. நிபந்தனை நிகழ்தகவு
2. மாதிரி வெளி

ஆ) பின்வருவன சாராமை நிகழ்வு, சார்ந்த நிகழ்வு எனக் கூறுக.
1. இரு தாயக்கட்டைகள் மேல் வீசப்படுகிறது. இரண்டிலும் தாயம் வருதல்
2. இரு நாணயங்கள் மேலே வீசப்பட்டது. தலை வருதல்
3. 52 சீட்டுக்களைக் கொண்ட சீட்டுக்கட்டில் இருந்து இரு தடவை மீள்வைப்பின்றி சீட்டு எடுக்கப்படும்போது ராஜா வருதல்.
4. தாயக்கட்டை ஒன்றை உருட்டும்போது இலக்கம் 2 அல்லது 3 இற்கு மேற்பட்ட எண் வருதல்.
5. A,B என்ற இருவர் ஓட்டப்போட்டியில் ஓடும்போது A வெற்றிபெறுதல்.

இ) 52 சீட்டுக்களைக் கொண்ட சீட்டுப் பக்கற் ஒன்றில், ஒன்றன்பின் ஒன்றாக மீள் வைப்பின்றி 3 சீட்டுக்கள் எடுக்கப்பட்டன. பின்வருவனவற்றுக்கான நிகழ்வைக் காண்க.
1. ராணி ஆடித்தன் வருதல்
2. ஒரே சீட்டு வருதல்

ஈ) நிகழ்தகவின் மீடிறன் விபரிப்பையும், சம நிகழ்தகவையும் விளக்குக.

## பகுதி - II

05) அ) பின்வரும் ஏதாவது ஒரு துறையின் விஞ்ஞான அம்சங்களை விளக்குக.
1. வரலாறு
2. தொல்பொருளியல்
3. உளவியல்

ஆ) கருவிகள் இல்லாத விஞ்ஞானம் ஒரு முழுமையான விஞ்ஞானம் அல்ல என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

இ) அளத்தலின் நோக்கினையும், நிபந்தனைகளையும் விளக்குக.

ஈ) சமூக விஞ்ஞான ஆய்வில் மொழியின் பயன்பாடு யாது?

06) அ. பின்வரும் புள்ளிவிபரக் கணிப்பீட்டு முறையை விளக்குக.
1. நியம விலகல்
2. பரப்பீடு

ஆ) 2,4,1,3,8,6 இதன் இடை, சராசரி விலகல் என்பவற்றைக் கணிக்க.

இ) A யின் புள்ளித் தொகுதி = -4,-3,-2,0,0,0,2,3,4
B யின் புள்ளித் தொகுதி = -2,-1,-1,0,0,0,1,1,2 இவ் இரண்டுக்கும் இடையிலான தொடர்பு என்ன என விளக்குக.

ஈ) புள்ளிவிபர இணைப்பு என்பதை விளக்குக.

07) அ) பக்கச் சார்பான மாதிரி ஒன்றின் இயல்புகள் எவை?

ஆ) சமூக விஞ்ஞானத்தில் தரவுகள் உறுதிநிலை குறைவதற்குக் காரணம் யாது என உதாரணத்துடன் கூறுக.

இ) சமூக விஞ்ஞானத்தில் அவதானங்களை மேற்கொள்வதில் உள்ள இடர்பாடுகளைக் குறிப்பிடுக.

ஈ) இயல்திட்ட வாதமும், தொழிற்பாட்டு வாதமும் சமூக விஞ்ஞானத்துக்குப் பொருத்தமானது ஆகும். விளக்குக.

08) அ) சமூக விஞ்ஞானத்தில் கட்டுப்பாட்டுக் குழு முறையின் பயன்பாடுகளை விளக்குக.

ஆ) நேர்முகம், கேள்விக் கொத்து, ஆகியவற்றின் பயன்பாடுகளை விளக்குக.

இ) சோதனை ஒன்றுக்காகத் தெரிவுசெய்யப்படும் மாதிரி ஒன்று சமநிகழ்தகவாக இருக்கவேண்டும் என்று கூறப்படுவதன் பொருள் என்ன?

ஈ) சமூக விஞ்ஞானங்கள், பௌதீக விஞ்ஞானங்களைப் பின்பற்ற எத்தனிக்கும் போது அளக்கக்கூடியவற்றைத் தேர்ந்தெடுத்து மிகுதியைக் கைவிடுகின்றன என விளக்குக.

## பகுதி - III

09) அ). பின்வருவன மூன்றுக்கு சிறு குறிப்புத் தருக.
1. லூயி பாஸ்ரரும், சோதனையும்
2. தொடர்பு வாதமும், தோமஸ்கூனும்
3. ஜே.எஸ்.மில்லும், பரிசோதனை முறைகளும்
4. கைசன் பேக்கின் விஞ்ஞானக் கருத்துக்கள்.

ஆ) பரிணாமவாதம் தொடர்பாக லாமாக்க டார்வின், வலஸ் போன்றோரின் கருத்துக்களை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

10) அ) பின்வருவனவற்றுள் எவரேனும் இருவர் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய பங்களிப்பு என்ன?
1. எஸ்.இராமானுஜன்
2. ஹிப்போக் கிரட்டிஸ்
3. ஐன்ஸ்ரைன்

ஆ) நியூட்டன் - வானியல், விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு மேற்கொண்ட பங்களிப்புகளைத் தருக?

இ) மார்க்ஸ் வெயரின் விஞ்ஞானப் பங்களிப்பு யாது?

11) அ) வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் அடிப்படைத் தத்துவம் யாது?
ஆ) பொருளியல் விஞ்ஞானம் என்ற தரத்தை ஆய்வு செய்க.
இ) ஒழுக்கவியலின் விஞ்ஞானத் தன்மையை விளக்குக.
ஈ) சொட்டு பொறியியல் தத்துவம் என்றால் என்ன?

12) பின்வருவனவற்றில் எவையேனும் 4 இற்கு கட்டுரை வரைக.
1. சமயமும், விஞ்ஞானமும்
2. இன்ரநெற்றும், விஞ்ஞானமும்
3. உலகமயமாக்கலின் விளைவுகள்
4. விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
5. விஞ்ஞான வரலாறு